வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 25.07.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 234 | பக்கங்கள் : 16




# வடக்கு மாகாண பிரதம செயலாளராக தமிழ் அதிகாரி ஒருவரை நியமியுங்கள்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனத்தில் உடனடியாக மாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ளார்கள். இப் பதவிக்குப் பொருத்தமான தமிழ் அதி காரிகளில் ஒருவரை நியமித்து உதவுமாறும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

15

## மீண்டும் தொற்றாளர்கள் அதிகரிப்பதால் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க நேரிடும்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25

நாளாந்தம் தொற்றாளர் களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பதன் காரணமாக மீள வும் கட்டுப்பாடுகளை இறுக்க மாக்க நேரிடும் என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள் ளது.

நாட்டில் டெல்டா பிறழ்வு பரவி வரும் நிலையில், மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தினார்.

அவர் நேற்று ஊட கங்களிடம் மேலும் தெரி

15

## ஜனாதிபதியின் பௌத்த சிங்கள சிந்தனையின் வெளிப்பாடே பிரதம செயலாளர் நியமனம்

### முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஜூலை 25

ஆளுமையுள்ள பல தமிழ் அலுவலர்கள் இருக்கும் போது வடமாகாணசபையின் பிரதம செயலாளராகத் தமிழ் தெரியாத ஒருவரை நியமிக்க ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானம் அவரின் பௌத்த சிங்கள சிந் தனையின் வெளிப்பாடே என்று வட மாகாண முன்னாள் முதல மைச்சரும் பாராளுமன்ற உறுப் பினருமான நீதியரசர் விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனம் தொடர்பில் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து

15

## எரிபொருள் விலைக் குறைப்புக்கான சாத்தியப்பாடுகள் இப்போது இல்லை

### வலு சக்தி அமைச்சர் கம்மன்பில திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 25

"நாட்டில் எரிபொருள் விலைக் குறைப்புக்கு எந்தச் சாத்தியப்பாடும் இல்லை. இப் போதுள்ள நிலையில் எரி பொருள் விலை அதிகரிப்பைத் தவிர மாற்று வழிகள் இல்லை."

- இவ்வாறு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பில் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

15

## ஜோசப் தலைமையில் முன்னெடுத்த போராட்டத்துக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 25

இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில் கொழும்பில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக நீதிக்கான மக்கள் அமைப்பு குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தில் நேற்று முறைப்பா டொன்றைப் பதிவு செய் துள்ளது.

தனிமைப்படுத்தல்

15



## கறுப்பு ஜூலையை நினைவு கூர்ந்து கொழும்பில் நேற்று அஞ்சலி நிகழ்வு

கொழும்பு, ஜூலை 25

கறுப்பு ஜூலையை நினைவு கூறும் விதத்தில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டு 83 கலவரத் தில் மரணித்தவர்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி

15

## மேலும் 1,707 பேருக்கு நேற்றுக் கொரோனா

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,707 பேர் நேற்று அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

இதற்கமைய நாட்

15

## வீட்டு வேலைக்கு அமர்த்தப்படும் அனைவரும் பதிவு செய்யவேண்டும்

### புதிய நடைமுறையை பின்பற்ற அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 25

மகளிர் மற்றும் சிறுவர் அபி விருத்தி இராஜாங்க அமைச்சி னால் வீட்டு வேலைக்கு அமர்த் தப்படுவதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய, வீட்டு வேலைக்கு அமர்த்தப்படவுள்ள மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அனைவரும் தாம் வசிக் கும் பகுதிக்கு பொறுப்பான பிரதேச செயலகத்தில் பதிவு செய்தல் அவசியமென மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க

15

## கொரோனா தொற்றால் மேலும் 52 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தின் உறுதிப் படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத் துள்ள அறிக்கையில் இந் தத் தகவல் வெளியிடப்

15

## சிகிச்சையின் பின்னர் ரிஷாத் மீண்டும் சி.ஐ.டியின் தடுப்பில்

கொழும்பு, ஜூலை 25

உடல் நலக்குறைவு காரண மாக கொழும்பு தேசிய வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குற்றப் புல னாய்வு திணைக்களத்துக்கு மீள வும் அழைத்துச் செல்லப்பட் டுள்ளார்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித் துள்ளது.

கடந்த 17 ஆம் திகதி மருத் துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்,

15

## இப்படியும் நடக்கிறது...!

புகையிரத நிலையம் ஒன்றில், நாகரிகமாக உடை அணிந்திருந்த இளைஞனின் பெட்டியை நீண்ட தூரம் தூக்கி வந்தான் சிறுவன் ஒருவன்.

வாகனம் ஒன்றில் பெட்டியை ஏற்றியபோது, அந்த இளைஞன், கூலியாக ஒரு ரூபாயை அந்தப் பையனுக்குக் கொடுத்தான்.

கடுப்படைந்த சிறுவன் ''சேர்! உங்களைப் பற்றி எனக்குத் தெரியும்?'' என்றான்.

"என்ன தெரியும்?'' என்று கேட்டான் அவன்.

"நீங்கள் திருமணம் ஆகாதவர்", என்றான் சிறுவன்.

"சரி. வேறு என்ன என்னைப் பற்றி உனக்குத் தெரியும்?", என்று கேட்டான் அவன்.

"உங்களைப் போலவே உங்கள் தந்தையும் திருமணம் ஆகாதவர்", என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினான் பையன்.

ஒருவரை கெட்டவார்த்தைகளால் திட்டினால் கோபம் வரும். ஆனால், அந்தச் சிறுவனோ மிகக் கேவலமான வார்ததைகளால் திட்டியபோதும் அதனை மிக நாசூக்காக சொன்னான்.

கருஜெயசூரிய கூட்டிய கூட்டத்தில் சுமந்திரன் தெரிவித்திருந்த விடயங்களை நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

2015ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னர், சோபித தேரர் தலைமையில் ஒரு சிவில் அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த அமைப்பில் சேர்ந்து பணியாற்றிய சுமந்திரன், அன்று ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு பெரும் பங்காற்றியிருந்தார்.

மைத்திரியை வேட்பாளராக்கி அதனை சாத்திய மாக்கிய இரகசிய ஒப்ரேசனில் சுமந்திரனும் பங்களித்திருந்தார்.

இப்போது கரு தலைமையில் நடந்த அனைத்துக் கட்சிக்கூட்டத்தில், கூட்டத்தின் நோக்கம் குறித்து கரு உரையாற்றிய பின்னர், சஜித் உரையாற்றினார். அவரையடுத்து அங்கு உரையாற்றிய சுமந்திரன், சோபித தேரர் நடத்திய கூட்டத்தை நினைவு கூர்ந்ததுடன், இந்த புதிய முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதெனில் தமிழ் மக்கள் அதனால் அடையக்கூடிய நன்மைகளை அறியவேண்டும் என்றாராம்.

தமிழ் மக்களுக்கு தீர்வு விடயத்தில் வெளிப்படையாக தெரிவித்தால், சிங்கள மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வெற்றி பெறமுடியாது என்பதால் அதனை இரகசியமாக செய்துகொள்வது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல.

தீர்வு விடயத்தில் வெளிப்படையாக திட்டத்தை முன்வைத்து அதற்கு சிங்கள மக்களின் ஆதரவையும் பெற்றால் மாத்திரமே தீர்வு சாத்தியமானது என்பதை கூட்டமைப்பு இப்போதாவது புரிந்துகொண்டிருப்பதாக தெரிகின்றது.

கருவின் கூட்டத்தில் தனது கோபத்தை அந்தப் பையனின் பாணியில் நாகரிகமாக சுமந்திரன் திட்டிய போது, அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட மனோ கணேசன், நல்லாட்சி அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்ற சுமந்திரனின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்திருக்கிறார்.

இராணுவ கெடுபிடிகள் இல்லாத நிலையை நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்கள் அனுபவித்தனரென மனோ கணேசன் தெரிவித்திருக்கிறார்.

கல்முனையில் பிரதேச செயலகக் கோரிக்கைக்காக தமிழ் மக்களுக்காக பௌத்த துறவி ஒருவரும், சில தமிழ் சமூக செயல்பாட்டாளர்களும் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தபோது அங்கு சென்று தான் வழங்கிய உறுதிமொழியைக்கூட மனோவால் நிறைவேற்ற முடியவில்லை என்பதை அவர் மறந்திருக்க மாட்டார்.

இராணுவக் கெடுபிடிகளுக்கு எதிராக மட்டுமே தமிழ் மக்கள் இத்தனை காலம் போராடினார்கள் என்று அவர் நம்பினால் அது அவரின் தவறில்லைத் தானே.

**- ஊர்க்குருவி**

# அரசை விட்டு வெளியேறுமாறு எவருமே சு.கவிடம் கூறவில்லை

கூறுகிறார்
நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஜூலை 25

அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் எவரும் கூறவில்லை என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மறைந்த பொதுச் செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கவின் 21 வது நினைவு தினம் நேற்று கொழும்பில் உள்ள அவரது நினைவிடத்தில் இடம் பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார். "எங்களை யாரும் வெளி யேறச் சொல்லவில்லை. தலை வர் இன்று இங்கே இல்லை, அவர் அவசர விடயத்துக்காக பொலனறுவைக்கு சென்றுள்ளார்" என நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## மேலும் 957 பேர் பூரண குணம்!

கொழும்பு, ஜூலை 25

கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 957 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 665 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 93 ஆயிரத்து 113 ஆக பதிவாகியுள்ளது.

அதில் 22,446 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப்பெற்று வருகின்ற அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4,002 ஆக பதிவாகியுள்ளது.

## டெங்கு அபாயம்மிக்க பகுதிகளாக 10 மாவட்டங்கள்

கொழும்பு, ஜூலை 25

இலங்கையின் 10 மாவட்டங்கள் டெங்கு அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது ஆரம்பமாகியுள்ள பருவப்பெயர்ச்சி மழையுடன் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றில் மேல் மாகாணத்திலேயே பெருமளவானோர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருக்க வேண்டாம் என டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 7 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பித்தக்கது.

### கல்வி TV CHANNEL-1

**25.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2

**25.07.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 25.07.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஏராளமான ஹிசாலினிகள் உண்டு!

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்துவந்த, மலையகத்தை சேர்ந்த சிறுமி ஹிசாலினியின் மரணம் பலரின் கவனத்தை பெற்றிருக்கின்றது. அவர் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டாரென செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில், ரிஷாத் பதியூதினின் மனைவி மற்றும் அவரின் சகோதரர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். முதல் பார்வையில் சிறுமி ஒருவரை வீட்டு பணிப்பெண்ணாக வைத்திருந்ததே பாரதூரமான குற்றமாகும். இத்தனைக்கும் ஓர் அரசியல் தலைவரின் வீட்டில் ஒரு சிறுமி பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றாள். பாரதூரமான குற்றம். இதற்கு முன்னரும் இவ்வாறான சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அப்போதும் கூட, இவ்வாறான கண்டனங்களும் ஆர்பாட்டங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அனாலும் அநீதிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான விடயங்கள் எவ்வாறு நிகழ்கின்றன? சிறுவர்கள் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பலவீனமான நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே சிறுவர்களை துணிந்து வேலைக்கமர்த்தும் முயற்சிகளும் தொடர்கின்றன. இதில் பெற்றோரே முதல் குற்றவாளிகள். வறுமையிலிருந்து மீள்வதற்காக தங்களின் பிள்ளைகளை பொய் கூறி, தரகர்கள் மூலம் இவ்வாறு பணக்காரர்களின் வீடுகளில் வேலைகளுக்காக அனுப்புகின்றனர். இது ஒருவகையில் பிள்ளைகளை விற்பது போன்ற செயல்தான். இவ்வாறு தரகர்கள் மூலம் பணக்காரர்களின் வீடுகளுக்கு அனுப்பப்படும் சிறுமிகளே இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர். தரகர்கள் மூலம் அனுப்பப்படுவதால், சிறுமிகள், எஜமானர்களால் அடிமைகளாகக் கையாளப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

இதற்கு பின்னால் இருக்கும் அடிப்படையான காரணம் வறுமைதான். வறுமையின் கோரப்பிடியின் காரணமாகவே, பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய சிறு பிள்ளைகள் பணக்காரர்களின் வீடுகளுக்குள் சிறைப்படுகின்றனர். இப்போது நடந்திருப்பது ஒரு சம்பவம். ஆனால், வெளிச்சத்திற்கு வராமல் ஏராளமான விடயங்கள் புதைந்து கிடக்கலாம். எங்களுக்கு அருகிலும் ஏராளமான ஹிசாலினிகள் இருக்கலாம். அவர்களை நாம் கண்டும் காணாதவர்கள் போல் கடந்து போய் கொண்டிருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

யுத்தம் தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினரை கடைக் கோடி நிலைக்கு கொண்டுவந்துவிட்டது. தமிழர் தாயகப்பகுதியிலும் ஏராளமான ஹிசாலினிகள் இருக்கின்றனர். இன்றும் நமது சமூகத்தின் மத்தியில் யாசகம் செய்து வயிற்றை நிரப்பிக் கொள்ளும் மக்கள் கூட்டமொன்றும் வாழந்து கொண்டுதான் இருக்கின்றது. திருகோணமலையில், மூதூரில் அப்படியான பகுதிகள் இப்போதும் இருக்கின்றன. வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் திருகோணமலை நகர்புறங்களுக்கு வந்து யாசகம் பெறுவார்கள். தேர்தல் காலங்களில் இவர்களிடமுள்ள வாக்குகளை யாசகம் பெறுவதற்கும் கட்சிகள் போட்டி போட்டுக்கொள்வதுண்டு.

இப்படியான சமூகங்களிலிருந்துதான் ஹிசாலினிகள் உற்பத்தி செய்யப்படுகின்றனர். இவ்வாறான மக்களின் வாழ்நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தாத வரையில் ஹிசாலினிகளின் மரணமும் அவ்வப்போது எட்டிப்பார்த்தவாறே இருக்கும். இவ்வாறான சம்பவங்களை கண்டிப்பதுடன் மனிதநேய ஆர்வலர்களின் பணி முடிந்துவிடவில்லை. ஹிசாலினிகள் உருவாகும் சூழலை மாற்றுவது தொடர்பிலும் மனிதநேய சமூகங்கள் சிந்திக்க வேண்டும். மக்களின் வாழ்வாதார நிலைமை எங்கெல்லாம் தரம் தாழ்ந்து செல்கின்றதோ, அங்கெல்லாம் சுரண்டும் கூட்டமொன்று கழுகுகளாக சுற்றிக் கொண்டிருக்கும். அவ்வாறான ஒரு சுரண்டும் கூட்டமொன்றிடம் அகப்பட்டுத்தான் சிறுமி ஹிசாலினி சீரழிந்திருக்கிறாள்.

# செவ்வாயில் துரப்பணம் போட தயாராகும் நாசாவின் பெர்செவரன்ஸ் ஊர்தி



- ஜொனாதன் அமோஸ் -

*செவ்வாய் கோளின் பாறைகளில் துரப்பணம் இட்டு மாதிரிகளை சேரிக்க தயாராகிக் கொண்டிருக்கிறது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவின் பெர்செவரன்ஸ் ஊர்தி.*

*விரல் முனை அளவுக்கு சேகரிக்கப்படும் பாறை மாதிரி ஒரு குழாயில் அடைக்கப்பட்டு புவிக்கு திருப்பி அனுப்பப்படும்.*

*செவ்வாயின் மேற்பரப்பில் உள்ள பொருள்களை அதிநுட்ப ஆய்வகங்களில் ஆராய்வதன் மூலம் செவ்வாயில் எப்போதாவது உயிரினங்கள் வாழ்ந்ததுண்டா என்ற கேள்விக்கு விடை கிடைக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.*

*செவ்வாயில் உள்ள 45 கிமீ அகலமான ஜெசீரோ பள்ளத்தில் கடந்த பெப்ரவரி மாதம் தரையிறங்கியது பெர்செவரன்ஸ்.*

*இங்கே ஒரு ஏரி இருந்ததாகவும், ஓர் ஆற்றின் மூலம் அந்த ஏரிக்கு நீர் வந்திருக்கலாம் என்பதாகவும் ஒரு பிம்பத்தை அளிக்கின்றன செயற்கைக் கோள் புகைப்படங்கள்.*

*விஞ்ஞானிகள் சந்தேகிக்கிறபடி செவ்வாயில் ஒரு காலத்தில் நுண்ணுயிரிகள் இருந்திருக்குமானால், அதற்கான தடயங்கள் இந்த ஏரியில் இருப்பதற்கு வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.*

*ஐந்து மாதங்களுக்கு தரையிறங்கிய இடத்தில் இருந்து தென் திசையில் சுமார் 1 கிமீ தூரம் ஊர்ந்து வந்திருக்கிறது இந்த பெர்செவரன்ஸ் ஊர்தி. நொறுங்கிய பாறைப் பரப்பு என்று விவரிக்கப்படுகிற ஒரு இடத்தில் இது தற்போது நிற்கிறது.*

*சேகரிக்கப்படும் வெளுத்த செந்நிறப் "பாறை மாதிரி", ஜெசீரோ பள்ளத்தின் தரையில் பொதுவாக காணப்படுவதைப் போல இருக்கும் என்று விஞ்ஞானிகள் குழு நம்புகிறது.*

*இந்த பாறைப் பரப்பு படிவுப் பாறை வகையை சேர்ந்ததா அல்லது எரிமலைக் குழம்பின் மூலம் ஆனதா என்று ஆராயவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எதுவாக இருந்தாலும் அந்த முடிவு சுவாரசியமானது. ஆனால், எரிமலைக் குழம்பால் உருவான பாறையாக இருந்தால் மிகத் துல்லியமாக ஆய்வகத்தில் அதன் காலத்தை கணித்துவிட முடியும் என்கிறார் இந்த ஆய்வுத் திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி கென் ஃபார்லே.*

*அப்படி நடந்தால், செவ்வாயில் நாம் பார்க்கிற பல பொருள்களின் காலத்தை கணித்துவிடமுடியும் என்கிறார் அவர். தான் நிற்கிற பாறைப் பரப்பின் மேற்புறத்தை முதலில் சுரண்டி தூசியை அகற்றிவிட்டு பிறகுதான் அந்த இடத்தை தனது ஆற்றல் மிக்க கருவிகளால் ஆராயும்.*

*அந்தப் பாறையின் வேதித் தன்மை, உலோகவியல் கூறுகள், அமைப்பு ஆகியவற்றை இந்தக் கருவிகளால் ஆராய முடியும்.*

*இறுதியாக ஒகஸ்ட் மாதம், இங்கே துரப்பணம் போட்டு உட்பகுதியில் உள்ள மாதிரியை இதனால் எடுக்க முடியும். மாதிரிகளைத் திரட்டி சுமார் 40 சிறு குழாய்களில் அடைக்கும்.*

*பிற்காலத்தில் நாசா, ஐரோப்பிய விண்வெளி முகமைகள் மேற்கொள்கிற பயணங்களின் போது இந்த குழாய்கள் திரட்டப்பட்டு அவை பூமிக்கு கொண்டு வரப்படும்.*

*உயிர்கள் வாழ்ந்ததற்கான தடயங்களை பழங்காலப் பாறைகளில் தேடும் ஆராய்ச்சிக்காக எதிர்பார்க்கப்படும் பாறைகள் இவையேதான் என்கிறார் ஃபார்லே.*

*பெர்செவரன்ஸ் ஊர்தி செயல்படும் விதம் நாசாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. குறிப்பாக அது ஊர்ந்து செல்லும் விதம். இந்த ஊர்தி மிக அதிக அளவில் தாமே முடிவு செய்யும் நிலையை அடைந்துள்ளது.*

*ஆனால், கடந்த கால ஊர்திகளுக்கு அதிக அளவில் புவியில் இருந்து வழிகாட்டுதல்கள் தரவேண்டியிருந்தது. வழியில் தடைகள் இருந்தால் இந்த ஊர்தி தானாகவே அதைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்த்துவிட்டு ஊர்ந்து செல்கிறது.*

*இந்த ஊர்தியோடு கொண்டு செல்லப்பட்ட இன்ஜினியுட்டி என்ற மினி ஹெலிகாப்டர் திரட்டித் தந்த தரவுகள் உதவியோடு செயல்படுகிறது இந்த ரோபோட்டிக் ஊர்தி.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூலை - 25 ஞாயிற்றுக்கிழமை**
பிலவ வருடம் - ஆடி 09
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**25.07.2021**

**மேடம்**
வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பணி பற்றிய டென்ஷன் நீங்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.எதிர்பார்ப்பை அடைவதற்கான சந்தர்ப்பம் உண்டாகும்.

**இடபம்**
முயற்சியில் தீவிரம் காட்டி வெற்றியை எளிதாக நெருங்குவீர்கள். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவர். குடும்ப சண்டை உங்களால் பெரிதாக வேண்டாம்.

**மிதுனம்**
மனசாட்சிக்கு மதிப்பு கொடுங்கள். தீயவர்களின் நட்பு வேண்டாம். முன்னேறுவதற்குக் குறுக்கு வழியை நாடுவது நல்லதல்ல. வாழ்க்கைத்தரத்தை உயர்த்த கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.

**கடகம்**
திட்டமிட்ட விஷயங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினருடன் இனிய முறையில் நேரம் செலவிட்டு மகிழ்வீர்கள். மனதில் தெளிவு பிறக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**சிம்மம்**
வாய்ப்புகளைச் சரியாக பயன்படுத்துவீர்கள். நல்லவர்கள் வழிகாட்டுவர். உங்களால் நன்மை அடைந்த உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். வழக்கத்தை விட சற்று பணிச்சுமை கூடும். பாராட்டு கிடைக்கும்.

**கன்னி**
வீடு, பணி இடமாற்றத்துக்கு வாய்ப்புண்டு. வீண் பயம் மறையும். புதிய வேலை தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். உடல்நிலை சீராகும். பிரச்னை ஒன்றைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

**துலாம்**
பயணத்தால் ஆதாயம் காண்பீர்கள். சோர்வு ஏற்பட்டாலும் உற்சாகம் குறையாது.வியாபாரத்தில் வருமானம் உயரும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும்.பணியாளர்களுக்கு செல்வாக்கு கூடும்.

**விருட்சிகம்**
முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மனக்கசப்பு நீங்கும். மற்றவர் விஷயங்களில் ஆர்வம் காட்ட வேண்டாம். பொறுமை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். பணிகளைச் செய்வீர்கள்.


**தனுசு**
கற்பனை பயங்களை உதறுங்கள். உழைப்பு அதிகம் தேவைப்படும்.மன அமைதி தேவையென்றால் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். சிலருக்கு அரசாங்க விஷயங்களில் அனுகூலம்.

**மகரம்**
புதிய பதவி எதிர்பார்த்திருப்பவர்களுக்கு தடங்கல் ஏற்படலாம்.புதிய வாகனம் வாங்குவதை கொஞ்சம் தள்ளிப் போடுவது நல்லது.ஆரோக்கி யத்தில் அக்கறை செலுத்துங்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கும்பம்**
உணவுக் கட்டுப்பாடு அவசியம். யோகமான நாள். கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு வராமல் விட்டுக் கொடுங்கள். லாபம் ஏற்படும் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**மீனம்**
பொருளாதாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். நண்பர்கள் உதவி செய்வர். கடன் வாங்கும் சூழ்நிலை வரலாம். தொழிலை விரிவாக்க வேண்டாம். வருமானமோ கிடைக்க வாய்ப்புண்டு.

குமாரதாஸன்



# ரோக்கியோ நகர வானில் ட்ரோன்கள் காட்சிப்படுத்திய ஒளிரும் பூமிப்பந்து!

## கொரோனாக் கால ஒலிம்பிக் விழா பார்வையாளரின்றித் தொடங்கியது

## ரென்னிஸ் ஸ்ரார் தீபம் ஏற்றினார் ஆரம்ப நிகழ்வில் அதிபர் மக்ரோன்



உலகப் பெருந்தொற்று நோய் காரணமாக ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டு, நடக்குமா, நடக்காதா என்ற நிச்சயமின்மைகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டு வந்த ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

ஒலிம்பிக் தீப்பந்தம் ஏற்றப்போவது யார் என்பதில் பேணப்பட்ட ரகசியங்களுக்கு முற்றுப் புள்ளியாக க ஜப்பானின் பிரபல ரென்னிஸ் நட்சத்திரம் நயோமி ஒஸாகா (Naomi Osaka) தீபம் ஏற்றிவைத்தார்.23 வயதான நயோமி ஜப்பானிய தாய்க்கும் ஹெய்ட்டிநாட்டுத் தந்தைக்கும் பிறந்த கலப்பின ஜப்பானிய வீராங்கனை ஆவார்.

ஜப்பானிய தற்காப்புப் படைவீரர்கள் தேசியக் கொடியை ஏற்றினர். நாட்டின் உலகப் புகழ் பெற்ற பாடகி மிசியா(RnB singer Misia) தேசிய கீதத்தைப் பாடினார்.

ஜப்பானிய பேரரசர் நருஹிடோ (Naruhito) ஒலிம்பிக் போட்டிகளை உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைத்தார். அச்சமயம் அரங்கின் மேலே வாண வேடிக்கைகள் ஒளிர்ந்தன.பேரரசர் நருஹிடோவுடன் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தோமஸ் பாக் (Thomas Bach) இருவரும் மாஸ்க் அணிந்தவர்களாக கையசைத்து வீரர்களை வரவேற்றனர்.

ஆரம்ப விழா அரங்கத்துக்கு மேலே வானத்தில் சுமார் ஆயிரத்து 800 ட்ரோன்கள் பறக்கவிடப்பட்டு அவற்றின் மூலம் விநோதமான வண்ணக் கோலங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இறுதியில் ஒளிரும் ட்ரோன்கள் ஒன்று சேர்ந்து பூமிப் பந்தின் வடிவத்தில் வானில் வட்டமாகத் தோன்றிய காட்சி காண்போரைக் கவர்ந்தது.

சுமார் நான்கு மணி நேரம் நீடித்த வாண வேடிக்கைகள், கண்காட்சிகள், அணி வகுப்புகளுடன் தொடக்க விழா நிறைவடைந்தது. உலகெங்கும் உள்ள ஒலிம்பிக் ரசிகர்கள் தொலைக் காட்சி வாயிலாக அதனைக் கண்டு களித்தனர். மிக எளிமையான ஒலிம்பிக் விழா என்று ஊடகங்கள் இன்றைய தொடக்க நாளை வர்ணித்துள்ளன.

இருநூறு நாடுகளினது விளையாட்டு வீரர்கள் தத்தமது நாட்டுக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றனர். மொத்தம் 11 ஆயிரம் வீரர்கள் ஜப்பானில் கூடியுள்ளனர். ஆனால் சமூக இடைவெளி பேணல் காரணமாக அணிவகுப்புகளில் மிக அரிதான எண்ணிக்கையானோரை மட்டுமே காண முடிந்தது. போட்டியாளர்களைத் தினமும் வைரஸ் சோதனை செய்வது, தனிமைப்படுத்தலுடன் பயிற்சியில் ஈடுபட வைப்பது என்று பல வித சுகாதார நடைமுறைகள் அங்கு மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவிருக்கின்ற நாடு என்ற ரீதியில் பிரான்ஸ் அதிபர் மக்ரோனும் மற்றும் அமெரிக்க அதிபரது துணைவியார் ஜில் பைடன் உட்பட ஒரு சில வெளிநாட்டுப் பிரமுகர்களுமே இன்றைய தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். எண்பது வீரர்கள் அடங்கிய பிரெஞ்சு ஒலிம்பிக் விளையாட்டு அணியினருக்கு அதிபர் மக்ரோன் அங்கு வைத்துத் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

உலகம் இன்னமும் ஒரு பெரும் சவாலை எதிர்கொண்டு நிற்பதைத் தொடக்க நிகழ்வு பிரதிபலித்தது. இதற்கு முன்னர் றியோ, லண்டன் நகரங்களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளது தொடக்க நிகழ்வுகளில் காணப்பட்டது போன்ற பிராமாண்டம் இன்றைய விழாவில் தென்படவில்லை. ஜப்பானிய அரசாங்கப் பிரதிநிதிகளுடன் சேர்த்து ஆயிரத்துக்கும் குறைவானவர்களே ரோக்கியோ அரங்கில் கூடியிருந்தனர். அரங்கின் பெரும் பகுதி ஆசனங்கள் வெறுமையாய் கிடந்தன. "ஒலிம்பிக்கை நிறுத்து" என்று வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பிய கோஷங்கள் உள்ளே எதிரொலித்தன.

நாடு பெரும் தொற்றுக்குள் சிக்கியுள்ள நிலையில் 11 ஆயிரம் வெளிநாட்டு வீரர்களை விளையாட அழைப்பது ஒலிம்பிக் போட்டிக் களத்தை ஒரு பெரும் தீவிர தொற்றுப் பரப்பும் நிகழ்வாக (super- spreader event) மாற்றிவிடும் என்று கூறுவோர் போட்டியை நடத்துவதற்குக்கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

ஜப்பானில் கடைசியாக 1964 ஆம் ஆண்டு கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் ரோக்கியோவில் நடைபெற்றிருந்தன.

அங்கு ஆரம்பமாகியுள்ள 31 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் தொடர்ந்து ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. ▮



### சிறுவர், பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும்

# வன்முறைகளுக்கு எதிராக திருமலையில் போராட்டம்

**திருகோணமலை, ஜூலை 25**

**சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக திருகோணமலை - அனுராதபுரம் சந்தியில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

திருகோணமலை பெண்கள் குழுக்களின் ஒன்றிணைவுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றின் பின்னராக சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், இவ்வாறு வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (இ)

# கப்பம் கோரல் குழுவின் 4 உறுப்பினர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 25.

டுபாயிலிருந்து இயங்கும் கப்பம் கோரல் குழுவொன்றின் உறுப்பினர்கள் 4 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கப்பம் கோரும் குழுவின் பிரதானி டுபாய் நாட்டுக்குத் தப்பிச் சென்ற ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் 6 மனித கொலைக்குற்றச்சாட்டுக்கள் மற்றும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக அவர் டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

மேலும், அவர் களுத்துறை - எதனமடல பகுதியில், சிறைச்சாலை பஸ்ஸுக்குள் கொலை செய்யப்பட்ட ரணாலே சமயங் என்பவரின் உதவியாளர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் நிறுவனம் ஒன்றில் கப்பம் பெறத் தயாராகவிருந்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய குறித்த 4 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# ரிஷாத் வீட்டில் வேலைசெய்த 11 பெண்கள் துன்புறுத்தல்?

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 25

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு, மலையகத்திலிருந்து இதற்கு முன்னர் அழைத்துவரப்பட்டிருந்த 11 யுவதிகள் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 11 பேரில் இருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸ் தரப்பு செய்திகளை மேற்கோள்காட்டி "திவயின" என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பணிப்பெண்ணாக பணிபுரிந்த யுவதி ஒருவர் பம்பலப்பிட்டி பகுதியில் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவமொன்று தொடர்பிலும் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை, ரிஷாத் பதியுதீன் அமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதியில், அவரது உத்தியோகபூர்வ வீட்டில் மலையக யுவதி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சம்பவம் தொடர்பில், ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட யுவதி, தான் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான வீட்டின் அறை மற்றும் ஏனைய பகுதிகளைப் பொலிஸாருக்குக் காண்பித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

பிரதான பொலிஸ் பரிசோதகர் வருணி போகஹவத்த தலைமையிலான குழுவொன்று, இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக மலையகம் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரிஷாத் பதியூதீனின் வீட்டில் பணி புரிந்த 16 வயதான ஹிஷாலினி, தீக்காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே, மலையகப் பெண்களுக்கு ரிஷாத் பதியுதீன் வீட்டில் இடம்பெற்ற கொடுமைகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணி புரிந்த 11 பெண்களுக்கு பல்வேறு துன்புறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களில் இருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இவ்வாறு பணியாற்றிய இருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், ஹிஷாலினியை இரவு வேளைகளில் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு அருகிலுள்ள மின்சாரம் இல்லாத அறையொன்றில் வீட்டின் உரிமையாளர்கள் பூட்டி வைத்திருந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

இரவு வேளைகளில் மலசல கூடத்துக்குச் செல்லக்கூட முடியாத நிலையை ஹிஷாலினி எதிர்நோக்கியிருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் புரிந்தார் எனக் கூறப்படும் குறித்த 11 யுவதிகளையும், தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள இடைத்தரகரான பொன்னையாவே அழைத்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு மலையக யுவதிகளை பணிக்கு அழைத்து வருவதற்காக, ரிஷாத் பதியுதீன் தரப்பிலிருந்து இலட்சக்கணக்கான பணத்தை இடைத்தரகர் பெற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# சிறுமி ஹிஷாலினி தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தன் கடமையைச் செய்கின்றது; எவருக்காகவும் கைவிடோம்!

## கூப்பாடு போடும் டிலான் இதை அறியவேண்டும் என்கிறார் மனோ

கொழும்பு, ஜூலை 25.

"மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வேலு குமார், உதயகுமார் ஆகிய எம்.பிக்கள், சிறுமி ஹிஷாலினி தொடர்பில் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள் எனக் கூசாமல் பொய் பேசும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ச கட்சி எம்.பி. முஹமட் முஸம்பில் ஆகிய அரச கட்சி அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக் கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?"

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இந்த விவகாரம் பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது: -

"சிறுமி ஹிஷாலினி தொடர்பாக நாம் என் கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளோம். தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம்,

(1) பொரளை நிலையை பொலிஸ் விசாரணை ஆய்வு

(2) பொலிஸ் தலைமையக விசாரணை மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள் ஆய்வு

(3) பாராளுமன்றத்தில் உரை மற்றும் நேரடியாக பொலிஸ் துறை அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேள்வி

(4) மலையகத்தில் நேரடி ஆர்ப்பாட்டங்கள்

(5) சிங்கள மொழி ஊடக மாநாடுகள்

(6) சிங்கள தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகள்

ஆகியவற்றைச் செய்த பின்னர்தான், "சிறுமி ஹிஷாலினி" விவகாரம் தேசிய அரங்கில் சூடுபிடித்தது என்பதை கூப்பாடு போடும் அரச அரசியல்வாதிகள் உணரவேண்டும்.

இது எமது கடமை. அதை தமிழ் முற்போக்குக் கூட்டணி எவருக்காகவும் கைவிடாது. ஹிஷாலினி எமது இரத்தம். எமது மக்களுக்காக நாம் வாய் திறந்து பேசாவிட்டால், யார் பேசுவது? நாம் போராடாவிட்டால், யார் போராடுவது? என்பதை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள், நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம், சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இன்று தோட்டத்தொழிலாளர் வறுமையில் வாடுகின்றனர். அவர்களது வருமானம் எமது நல்லாட்சியின் 2019ஆம் ஆண்டை விட, இன்று வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்குக் காரணம், ஒருபுறம், ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கித் தருகின்றேன் என்று கூறிவிட்டு இந்த அரசு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது.

சிறுமி ஹிஷாலினி உட்பட தோட்டத்தொழிலாளர்களின், பிள்ளைகள் நகரப் பகுதிகளுக்குத் தொழில் தேடி வந்து ஆபத்தில் விழுவதற்கு பெருந்தோட்டத்துறையில் இன்று நிலவும் அதிமோச வறுமைதான் காரணம். இந்த அதிமோச வறுமைக்கு காரணம் என்ன? இந்த அரசின் தோட்டத்தொழிலாளர் தொடர்பான அக்கறையின்மை, அரசில் இருக்கின்ற இ.தொ.காவின் மௌனம் ஆகியவையே பிரதான காரணங்கள் என்பதை, இன்று சிறுமி ஹிஷாலினி பற்றி பொய்யாகக் கூப்பாடு போடும் எம்.பி. டிலான் பெரேரா, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.பி. முஹமட் முஸம்பில் போன்றவர்கள் உணர வேண்டும்.

இந்தப் பிரச்சினை தமிழ், முஸ்லிம், சிங்கள இனப் பிரச்சினை அல்ல. இது ஒரு சட்டம், ஒழுங்குப் பிரச்சினை என்று கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் இலங்கை பாராளுமன்றத்தில், மிக நிதானமாகவும், மிகப் பொறுப்புடனும் தெளிவாகப் பலமுறை எடுத்துக் கூறிவிட்டேன்.

ஹிஷாலினி வீட்டுக்குச் சென்று மௌன அஞ்சலி செலுத்தியதைத் தவிர, அரசுக்கு உள்ளே இருக்கும் இ.தொ.கா., இந்தப் பிரச்சினை பற்றி கூறும்படியாக இது வரை ஒன்றும் செய்யவில்லை. எதுவாயினும், இப்போது விசாரணை நடக்கின்றது. அதற்கு அனைவரும் கண்காணிப்புடன் கூடிய பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

இந்நிலையில், எம்மைப் பற்றி கூசாமல் பொய் பேசி குறை கூறும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ச கட்சி எம்.பி. முஹமட் முஸம்பில் ஆகிய அரச அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக் கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?

நாம் எமது ஆட்சியில் துண்டு விழும் மேலதிக 50 ரூபாவைத் தரத் தவறிவிட்டோம் எனக் குற்றஞ்சாட்டிய இவர்கள் தோட்டத்தொழிலாளருக்கு இவர்களின் ஆட்சியில் இன்று என்ன செய்துள்ளார்கள்?

ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் தருகின்றோம் என்று கூறிவிட்டு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றை தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, இந்த அரசு சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது. ஆகவே, பத்து நாள் வேலையும், குறைந்த வருமானமும் தோட்டத் தொழிலாளரை வாட்டுகின்றது. வறுமை பெருந்தோட்டத் துறையில் தாண்டவமாடுகின்றது.

இதுவே இன்று சிறுமி ஹிஷாலினி உட்பட கணிசமான பெருந்தோட்டத் துறை பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் நகரப்பகுதிகளுக்கு தொழில் தேடி வர பிரதான காரணம்.

வறுமை எல்லோருக்கும் பொதுவானதுதான். அதனால்தான், இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் தொழில் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். இப்படிதான், மூதூரைச் சேர்ந்த ஏழை முஸ்லிம் சிறுமி ரிசானா நபீக், சவுதி அரேபியா சென்று அங்கே கொல்லபட்டார்.

ஆனால், பெருந்தோட்டத்துறையில், இன்று ஏற்பட்டுள்ள நிலைமை, 1970 களில் அன்றைய ஸ்ரீமாவோ பண்டார நாயக்க ஆட்சிக்கால நிலைமையை நெருங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை இந்த அறிவு கெட்ட அமைச்சர்கள் அறிந்துகொள்ள வேண்டும். எதிரணியில் இருக்கும் எம்மை பொய்யாகக் குறை கூறுவதை விட்டு, இவர்கள் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் ஆவன செய்ய வேண்டும்" - என்றார். (இ)

# தமிழக முகாம்களில் இலங்கை தமிழரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும்

## மு.க.ஸ்டாலின் வலியுறுத்து



சென்னை, ஜூலை 25

**தமிழக முகாம்களிலுள்ள இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் மேலும் கூறியுள்ளதாவது, "இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தனி வழிகாட்டுதல் குழுவொன்றினை அமைக்க வேண்டும்.

மேலும் முகாம் வாழ் தமிழர்களுக்கு குடிநீர், குடியிருப்பு, கழிவறை வசதி, மாதாந்திர பணக் கொடையை உயர்த்தி வழங்குதல், தெருவிளக்கு மற்றும் மின்வசதி, இலவச எரிவாயு இணைப்பு, திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இதேவேளை, வெளிநாட்டு வாழ் தமிழர்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலத்துறை என்ற புதிய துறையை உருவாக்குதல் வேண்டும்.

அத்துடன் அவர்களின் குழந்தைகளுக்கு இணையவழி ஊடாக தமிழை கற்பிப்பதற்கு தமிழ் இணையக் கல்விக் கழகம் அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



# பொதுக்கிணறு அருகே வெடி மருந்துப் பொதி

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ் புறநகர் பகுதியில் வெடி மருந்து அடங்கிய பொதியொன்றை இராணுவம் மீட்டதாக கூறியுள்ளது.

குருநகர் பொது கிணற்றடியில் நேற்று இரவு ரிஎன்ரி ரக வெடிபொருள் அடங்கிய பொதி மீட்கப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது. இதில் 4 டெட்டனேட்டர்களும் காணப்பட்டதாக இராணுவத்தரப்பால் கூறப்பட்டுள்ளது. (அ)

# பல்கலை அனுமதி இணையவழி விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக, இணையவழியில் விண்ணப்பிக்க முடியாத மாணவர்களுக்கும், ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கும், யுனிகோட் ஒழுங்கை (Unicode order) மாற்ற விரும்புவோருக்கும் ஒரு சலுகை காலத்தை வழங்க பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

நாட்டில் நிலவும் கொவிட் -19 தொற்று நிலைமை காரணமாக, 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழியில் விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு ஜூலை 30ஆம் திகதி வரை சலுகை காலம் வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியில் அல்லது அதற்கு முன்னதாக 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு www.ugc.ac.lk என்ற வலைத்தளம் வழியாக கூடுதல் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியில் அல்லது அதற்கு முன்னதாக 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை ஏற்கனவே இணையவழியில் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மற்றும் யுனிகோட் வரிசையை மாற்ற விரும்பும் விண்ணப்பதாரர்கள், யுனி - குறியீடுகளின் வரிசையை மாற்ற உங்கள் கணக்கில் உள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

புதிய யுனிகோட் குறியீடுகளை அல்லது யுனிகோட் குறியீடுகளை அகற்றவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# ரிஷாத் பதியுதீன் மனைவி உட்பட நால்வரையும் 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி!

கொழும்பு, ஜூலை 25

பணிப்பெண்ணான சிறுமி ஒருவர் தீக் காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட மூன்று பேரை தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த மூவரையும் 48 மணி நேரம் விசாரணை செய்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# ஹிஷாலினி உயிரிழப்புக்கு நீதி கோரி கிளிநொச்சியில் நேற்று போராட்டம்!

கிளிநொச்சி, ஜூலை 25

ஹிஷாலினி எனும் சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் பாரதிபுரம் சூசைபிள்ளை கடை சந்தியில் இடம்பெற்றது.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராம மட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த போராட்டத்தில் பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



"பள்ளி செல்ல வேண்டிய ஒரு பாலகியை உன் வீட்டில் வேலைக்கு வைத்துவிட்டு நல் லாட்சி செய்தாயோ?", "அரசே சிறுமியின் சாவுக்கு தீர்வு எங்கே?", "யாராக இருந்தாலும் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும்", "பெண் அடிமையின் உச்சம் ஒரு பாலகியின் மரணம்" உள்ளிட்ட கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் ஏந்தி சுமார் 3மு நிமிடங்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# சமையல் எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 25

சமையல் எரிவாயு 18 லீற்றர் கொண்ட சமையல் எரிவாயுவை 1,150 ரூபாவுக்கு விற்பனை செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்திற்குள் வெளியிடப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

# ஓ.எல். செயன்முறை பரீட்சையிலிருந்தும் ஆசிரியர் சங்கம் உடனடியாக விலகியது

கொழும்பு, ஜூலை 25

நாட்டிலுள்ள அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சங்கங்கள் சம்பள பிரச்னை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 10 நாட்களுக்கும் அதிகமாக இணையவழி கற்பித்தல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ள நிலையில், நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத்துக்கான செயன்முறைப் பரீட்சை செயற்பாடுகளிலிருந்து விலகுவதற்கும் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பணிபகிஷ்கரிப்பை ஆரம்பித்த பின்னர் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் போராட்டத்தில் அடுத்தடுத்த கட்டங்களை நோக்கிச் செல்ல வேண்டியேற்படும் என்று நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். அதற்கமைய புதிய தீர்மானமொன்றை எடுத்துள்ளோம்.

அதாவது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கான செயன்முறைப்பரீட்சை மற்றும் ஏனைய பரீட்சை செயற்பாடுகளில் எந்தவொரு ஆசிரியரும் ஈடுபடாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கும், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் ஆசிரியர் சங்கத்தின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை அறியத் தருகின்றோம் - என்றார்.

# முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு காத்தான்குடியில் சினோபார்ம் தடுப்பூசி

மட்டக்களப்பு, ஜூலை 25

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபாம் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல்.எம்.நபீல் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கொவிட் -19 தடுப்பூசிகள் நேற்று சனிக்கிழமை ஏற்றப்பட்டுள்ளது.

கொவிட் -19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி நகர சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பொது மக்களுக்கான சினோபாம் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் முகமாக முன்னிறுத்தப்படுவாரா மம்தா?

சரோஜ் சிங்

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி உரையாற்றுவதாக இருந்தால், மிக அரிதாகவே இந்தியில் உரையாற்றுவது வழக்கம்.

ஆனால் கடந்த புதன்கிழமை அனுசரிக்கப்பட்ட தியாகிகள் தினக் கூட்டத்தில் மம்தா இந்தி மற்றும் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

கடந்த 28 ஆண்டுகளாக, ஜூலை 21 அன்று மேற்கு வங்கத்தில் நடந்த ஒரு ஆர்ப்பாட்டத்தின் போது கொல்லப்பட்ட தனது 13 தொண்டர்களின் நினைவாக, தியாகிகள் தினம் அனுசரித்து வருகிறார் மம்தா. ஆனால் இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் ஒருபோதும் உரையாற்றியதில்லை.

இந்த முறை அவர் உருவாக்கிய அம்மரபை அவரே உடைத்தார். காரணம், இந்த நிகழ்ச்சி குறித்த சுவரொட்டிகள், மேற்கு வங்கத்திலிருந்து திரிபுரா வரை, குஜராத் முதல் தமிழ்நாடு வரை பரப்பப்பட்டன.

இந்த மெய்நிகர்க் கூட்டத்தில் டெல்லியைச் சேர்ந்த பல எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றனர். மேற்கு வங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் அகாலிதளம், சமாஜ்வாதி கட்சி, என்.சி.பி, ராஷ்டிரிய ஜனதா தளம், ஆம் ஆத்மி கட்சி, திமுக, டிஆர்எஸ், சிவசேனா, காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் டிஜிற்றல் தளத்தில் கலந்து கொண்டனர்.

ஒரே நேரத்தில் பல எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி இருந்த சூழலில்,மம்தாவும் அவ்வாய்ப்பைத் தவறவிட விரும்பவில்லை. எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை அடுத்த வாரம் மூத்த தலைவர்கள் முன்னிலையில் கூட்டவும் அவர் முன்மொழிந்தார். மேலும், தானே இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் அவர் விருப்பம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது, அனைத்து கட்சித் தலைவர்களும் டில்லியில் உள்ளனர். மம்தாவும் அடுத்த வாரம் டில்லிக்கு வருகிறார். கடந்த புதன்கிழமை அவர் ஆற்றிய உரையில், தான் ஒரு தொண்டர் மட்டுமே என்றும் மூத்த தலைவர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவேன் என்றும் தெளிவாகக் கூறினார்.

ஆனால் 2024 மக்களவைத் தேர்தலில் மம்தா பனர்ஜி ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகளின் முகமாக முன்னிறுத்தப்பட வாய்ப்புள்ளதா என்ற ஊகம் எழுந்துள்ளது.

தன்னை ஒரு தொண்டர் என அவரே கூறிக்கொண்ட பிறகும், பிரதமர் பதவிக்கான அவரது வாய்ப்பை அரசியல் வல்லுநர்கள் லேசாக எடுத்துக் கொள்ள வில்லை. இதற்கு மிகப் பெரிய காரணம், தியாகிகள் தினத்தன்று அவர் ஆற்றிய உரை.

**காலகட்டம்**

புதன்கிழமை அவர் நிகழ்த்திய உரையில், “2024-ல் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதற்கான ஏற்பாடுகள் இப்போதிலிருந்தே செய்யப்பட வேண்டும். நாம் எவ்வளவு நேரம் வீணடிக்கிறோமோ அவ்வளவு தாமதமாகும். அனைத்து கட்சிகளும் வர வேண்டும் பாஜகவுக்கு எதிராக ஒரு முன்னணியை உருவாக்க வேண்டியது அவசியம்.” என்று கூறியுள்ளார் மம்தா பானர்ஜி.

மம்தாவின் இந்த அறிக்கை குறித்துக் கருத்து தெரிவித்த மூத்த ஊடகவியலாளர் மஹுவா சாட்டர்ஜி, 2019 மக்களவைத் தேர்தலுக்குச் சற்று முன்னர், சந்திரபாபு நாயுடுவால் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அப்போது தேர்தலுக்குக் குறுகிய காலம் மட்டுமே இருந்தது. போதிய அவகாசம் இல்லாததால் வெற்றி கிட்டவில்லை என்கிறார்.

இந்த முறை மம்தா ஏற்கனவே இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு முயற்சியை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது. எந்தவொரு போருக்கும் அடிப்படை மந்திரம் எதிராளி பலவீனமாக இருக்கும் போது தாக்குவது தானே. பாஜக முன்பை விட சற்று பலவீனமாகக் காணப்படும் தருணத்தில் மம்தா அதை செய்யத் தொடங்கியுள்ளார்.

மேற்கு வங்கத் தேர்தலில் பாஜக முழு பலத்துடன் போராடியது, ஆனால் மம்தா பானர்ஜியின் தந்திரத்துக்கு முன், “சோனார் பங்களா” என்ற பாஜகவின் கனவு கலைந்தது. மேற்கு வங்காளத்தின் வெற்றியால் மம்தா உற்சாகமாக இருக்கிறார். ஆனால் பா.ஜ.க. சற்று சுணக்கமடைந்து இருக்கிறது.

நீங்கள் களத்தில் இறங்கி நேருக்கு நேர் மோதத் தயாராக இருந்தால், மோடி-ஷா ஜோடியை தோற்கடிக்க முடியும் என மம்தா பானர்ஜி எதிர்க்கட்சிகளுக்கு முன்னால் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

**ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள்**

ஆனால் மூத்த பத்திரிகையாளர் நீர்ஜா சௌத்ரி, மஹுவா சாட்டர்ஜியின் கருத்துகளுடன் அதிகம் உடன்படுவதாகத் தெரியவில்லை.

மமதா பானர்ஜியின் டெல்லி கனவு நனவாக இன்னும் காலம் வரவில்லை என்று அவர் கருதுகிறார். புதன்கிழமை நடந்த மெய்நிகர் பேரணி இந்த திசையின் முதல் படி என்பதில் ஐயமில்லை. அவர் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க விரும்புகிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரால் இதைச் செய்ய முடியுமா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. காலம் கனியும் முன் அவர் பிரதமர் கனவு காண்கிறார் என்பது நீர்ஜா சௌத்ரியின் கருத்து.

”மம்தா எதிர்க்கட்சியில் யாரைக் கூட்டுவார்? அதை எப்படிச் செய்வார்? யார் உடன் வருவார்கள்? யார் வரமாட்டார்கள்? யார் வழிநடத்துவார்கள்? மேற்கு



வங்கத்திற்கு வெளியே அவருக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது? இத்தனை கேள்விகள் எழுகின்றன.

காங்கிரஸ் தன்னை ஒரு தேசியக் கட்சியாகக் கருதுகிறது. மற்ற கட்சிகள் பிராந்தியக் கட்சிகள். எனவே புதன்கிழமை மம்தாவின் பேரணி மேற்கு வங்கத்திற்கு வெளியே தனது செல்வாக்கை விரிவாக்க அவர் மேற்கொண்ட ஒரு சிறு முயற்சி தான்” என்கிறார் நீர்ஜா.

பாஜகவை மத்தியிலிருந்து அகற்றும் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதே மம்தாவுக்கு ஒரு பெரிய சவால் என நீர்ஜா கருதுகிறார்.

புதன்கிழமை நடைபெற்ற பேரணியில், ஜூலை 27 முதல் 29 -க்குள் டெல்லியில் இந்த விவகாரம் தொடர்பாக கூட்டத்தைக் கூட்டுமாறு ஷரத் பவார் மற்றும் ப. சிதம்பரத்திற்கு மம்தா வேண்டுகோள் விடுத்தார். அந்த நேரத்தில் மம்தாவும் டெல்லி சுற்றுப்பயணத்தில் இருப்பார்.

காங்கிரஸ் அல்லது என்.சி.பி போன்ற கட்சிகளைச் சேர்ந்த ஒருவர் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதில் முன்னிலை வகிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பது அவரது அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. இதில் அவர் அவர்களை ஆதரிப்பார்.

ஆனால், மேற்கு வங்கச் சட்டமன்றத் தேர்தலின் போது, காங்கிரஸ் மற்றும் இடது சாரிகள் தவிர ஏனைய பெரிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், அது அகிலேஷ் யாதவ் ஆகட்டும், தேஜஸ்வி யாதவ் ஆகட்டும், சரத் பவார் ஆகட்டும், அனைவருமே மம்தாவை ஆதரித்தனர் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

சட்டமன்றத் தேர்தலின் போது மம்தாவை ஆதரித்த கட்சிகள் இன்னும் அவருடன் தான் நிற்கின்றன என்று மஹுவா சாட்டர்ஜி கூறுகிறார். இப்போது அந்த ஆதரவை மம்தா, பாராளுமன்றத்திலிருந்து வெவ்வேறு மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்கள் வரை விரிவாக்க விரும்புகிறார்.

மம்தா எதிர்க்கட்சிகளை மட்டுமல்லாமல் விவசாயிகளையும் அரவணைத்துச் செல்ல முற்படுகிறார். மேலும் ஒவ்வொரு தளத்திலும் பொதுமக்கள் பிரச்னைகளை எழுப்புகிறார்.

மேற்கு வங்கத்தில் பாஜகவுக்கு நேர்ந்த கதி உத்தரப் பிரதேச தேர்தலிலும் நடந்தால் அல்லது பாஜக வெற்றி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கை சற்று குறைந்தால், 2024 இல் எதிர்க்கட்சியின் பணி மிகவும் எளிதாகிவிடும் என்று மஹுவா மேலும் கூறுகிறார். ஆனால் அதற்கு மேற்கு வங்கத்தில் ஒரு மம்தா போல உத்தரப்பிரதேசத்தில் ஓர் ஆளுமை வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

இந்நிலையில், சமாஜ்வாதி கட்சி சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் என்று அகிலேஷ் யாதவ் பிபிசிக்கு அளித்த பேட்டியில் தெளிவாகக் கூறியுள்ளார், ஏனெனில் பெரிய கட்சிகள் தொகுதிப் பங்கீட்டில் அதிக இடங்களைக் கேட்கின்றன என்றும் ஆனால் அவர்களின் வெற்றி வாய்ப்புகளோ செயல் திறனோ அந்த அளவிற்கு இல்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இச்சூழலில், எதிர்க்கட்சிகள் சட்டசபைத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டு, மக்களவைத் தேர்தலில் ஒன்று கூடினால் அது எந்த அளவு பயனளிக்கும் என்பதை இப்போதே கணிப்பது கடினம். புதன்கிழமை நடந்த மமதாவின் பேரணியில் பகுஜன் சமாஜ் கட்சி, இடதுசாரி, தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் பி.டி.பி தரப்பிலிருந்து எவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சோனியா, ஷரத் பவார் மம்தாவை ஏற்கின்றனர்**

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதில் சோனியா, பவார் போன்ற பெரிய தலைவர்களின் நிலைப்பாடு மிக முக்கியமானதாக இருக்கும் என நீர்ஜா சௌத்ரி கூறுகிறார். எதிர்க்கட்சித் தலைவர்களை ஒன்றிணைப்பதில் பிரசாந்த் கிஷோரின் பங்கு முக்கியமானது எனவும் நீர்ஜா கருதுகிறார்.

“காங்கிரஸில் உட்கட்சிப் பூசல்கள் இருந்தாலும், கடந்த இரண்டு மக்களவைத் தேர்தல்களில் அதற்கு அதிக இடங்கள் கிடைக்காத நிலையிலும் சட்டமன்றத் தேர்தலில் கட்சியின் செயல்திறன் சிறப்பாக இல்லாத நிலையிலும் காங்கிரஸ் இன்னும் பெரியண்ணன் மனப்பான்மையிலிருந்து வெளியே வரவில்லை.

பவாரும் தனது பிராந்தியத்தில் ஒரு வலுவான தலைவர் ஆவார். இத்தகைய சூழ்நிலையில், பிராந்தியக் கட்சிகள் தேசியக் கட்சியின் தலைமையை ஏற்றுக்கொள்வதா என்ற கேள்வி எழுகிறது. மறுபுறம், காங்கிரஸ் போன்ற ஒரு தேசியக் கட்சி பிராந்தியக் கட்சியின் தலைமையை ஏற்க முடியுமா என்பதும் ஒரு கேள்வி.

தற்சமயம் எதிர்க்கட்சிகள் அனைத்துக்கும் ஒரே நோக்கம், பாஜகவை ஆட்சியை விட்டு அகற்றுவது தான். எனவே, சோனியா மற்றும் பவார் மம்தாவின் தலைமையை ஏற்றுக் கொள்வதில் சிக்கலிருக்காது.” என மஹுவா கூறுகிறார்.

காங்கிரஸ் தேசிய அளவில் ஒரு பெரிய கட்சி என்பது உண்மைதான், ஆனால் சோனியா காந்தி பிரதமராக விரும்பவில்லை. காங்கிரசில் இருந்து பிரதமர் பதவிக்கு ராகுலின் பெயர் தான் முன்வைக்கப்படும்.

ராகுல் காந்தி மம்தா பானர்ஜியை விட வயது மற்றும் அனுபவம் இரண்டிலும் குறைந்தவர். ராகுல் காந்தி மம்தா பானர்ஜியைப் பிரதமராக ஏற்றுக் கொள்கிறார் என்று வைத்துக்கொண்டாலும் அதனால் அவருக்கு எந்த நஷ்டமும் இல்லை. பொது வெளியில் ராகுல் எப்போதுமே ஈகோ கொண்டவராகத் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பவாரும் தேர்தல் அரசியலை நன்கு புரிந்துகொண்டவர். அவர் மகாராஷ்டிராவின் மராட்டிய தலைவர். ஆனால், மம்தா பானர்ஜி மூன்று முறை முதல்வராக பதவி வகித்தவர், வகித்துக் கொண்டிருப்பவர்.

ஷரத் பவார், மம்தா, சோனியா என அனைவரும் ஒரு காலத்தில் காங்கிரசில் ஒன்றாக இருந்தவர்கள் என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

**மேற்கு வங்கத்துக்கு வெளியே மம்தாவின் செல்வாக்கு**

“2024இல் மம்தா பிரதமர் வேட்பாளரா என்று நீங்கள் கேட்டால், இந்த வாய்ப்பை நிராகரிக்க முடியாது என்று நான் கூறுவேன்.” என்கிறார் மஹுவா.

மேற்கு வங்கத்தில் 42 மக்களவை இடங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் தேவேகவுடா மற்றும் ஐ.கே குஜ்ரால் ஆகியோர் பிரதமராக முடியும் போது, மேற்கு வங்க தேர்தலுக்குப் பிறகு மம்தாவின் வாய்ப்பையும் புறக்கணிக்க முடியாது. இன்று, நாட்டின் ஒவ்வொரு மூலையிலும், மேற்கு வங்கத்தில் பாஜகவின் தோல்வி பற்றி பேசப்படுகிறது, அத்துடன் மம்தாவின் பெயரும் பெரிதாகி வருகிறது.

மம்தாவின் கட்சி மேற்கு வங்கத்தின் பிராந்தியக் கட்சி தான். ஆனால், மேற்கு வங்கத்திற்கு வெளியே தனது அடையாளத்தைப் பரவலாக்கும் நோக்கத்துடன் தான் தியாகிகள் தின நிகழ்ச்சியின் சுவரொட்டிகளை மாநிலத்துக்கு வெளியிலும் பரப்பினார்.

டெல்லி, குஜராத், திரிபுரா, பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நேரடியாக ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சியில், வங்காள மொழியில் லாமல், இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மம்தா ஆற்றிய உரை தான் சிறப்பம்சம்.

மம்தாவின் அறிக்கையை விரிவாக விளக்கிய மஹுவா, “மம்தா, தான் பிரதமராவது தனது முன்னுரிமை அல்ல என்றும் பாஜகவை அகற்றுவது தான் முக்கிய நோக்கம் என்றும் அதற்குத் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.” என்று கூறுகிறார்.

மம்தா பானர்ஜியின் உரைக்குத் தங்கள் விளக்கங்களை வழங்கி வருகிறார்கள் வல்லுநர்கள். ஆனால் வரவிருக்கும் நாட்களில், 2024 ஆம் ஆண்டுக்கான பிரதமர் பதவிக்கான வேட்பாளர்களைப் பற்றி ஒரு விவாதம் எழும் போது, நிச்சயமாக மம்தா பானர்ஜியின் பெயரும் பட்டியலில் இருக்கும்.

முருகபூபதி



# வெலிக்கடை சிறை படுகொலை 38 ஆண்டுகள் !

மூன்று வருடங்களுக்கு முன்னர், 2019 ஆம் ஆண்டு பிரான்ஸ் பயண மாவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், எனது எழுத்துக்களை தொடர்ந்து படித்துவந்த ஒரு அன்பர் என்னுடன் மின்னஞ்சலில் தொடர்புகொண்டார்.

அவரது பெயரைப்பார்த்துவிட்டு, அந்தப்பெயரில் இலங்கையில் எவரை யும் எனக்குத் தெரியாதிருந்த நிலையில், தமிழ்நாட்டில் நீங்கள் எவ்விடம்? எனக் கேட்டிருந்தேன். அவர் தமிழ்நாட்டில் சிறிதுகாலம் வசித்திருந்தாலும், அவரது பூர்வீகம் இலங்கையில் வடபுலம்தான் என்பதை தெரிந்துகொண்டேன்.

இலங்கையில் நீடித்த இனப்பிரச்சினை யும் இனவிடுதலைப்போராட்டமும் அவரையும் ஓட ஓட விரட்டியிருக்கிறது. இந்தப்போராட்டத்தில் அவரும் ஒரு இயக்கத்தில் இணைந்திருந்தவர். அத்துடன் அறிவுஜீவி. தொடர்பாடலின் ஊடாக அவரும் பிரான் ஸ ிலிருப்பதை அறிந்துகொண்டேன்.

நான் அங்கு சென்ற தும் என்னைத்தேடி வந்து சந்தித்தார். அவ ருக்கு நான் ஏற்க னவே எழுதியிருந்த சொல்லமறந்த கதைகள், சொல்லவேண்டிய கதை கள் ஆகிய நூல்களை கொடுத்தேன். அவற்றைப் பார்த்துவிட்டு, தன்னிடமும் சொல்லவேண்டிய கதைகள், சொல்ல முடியாத கதைகள் ஏராளமாக இருப்பதாகச்சொன்னார்.

எனக்கு கதைகேட்பதில் அலாதிப்பிரியம். அவரிடம் அவரது கதைகளைக்கேட்டேன். அனைத்தும் திகிலையும் அதிர்ச்சியையும் வியப்பையும் தந்தன. அவர் சொல்லச்சொல்ல கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

உயிருக்காக போராடிய தருணங்களையும் அனுபவித்த சித்திரவதைகளையும் வேதனைக்குரிய விடயங்களையும் சுவாரஸ்யமாக சிரித்துக்கொண்டே சொன்னார். அவர் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறையில் நடந்த படுகொலைச்சம்பவங்களின்போது உயிர்தப்பியவர்! அவரது வாழ்வில் அந்த இரண்டு நாட்கள் மட்டுமல்ல, அதன்பின்னர் மட்டக்களப்பு சிறையில் நடந்த சம்பவங்களும் மறக்கப்படமுடியாதவை.

தமிழகத்தில் தஞ்சமடைந்த மட்டக்களப்பைச்சேர்ந்த இயக்குநரும் ஒளிப்பதிவாளருமான பாலுமகேந்திராவுக்கு மட்டக்களப்பு சிறையுடைப்பு (23 செப்டெம்பர் 1983) சம்பவத்தை பின்னணியாகக்கொண்டு ஒரு திரைப்படம் எடுக்கும் எண்ணம் இருந்ததாக ஒரு செய்தி முன்னர் கசிந்திருக்கிறது. அதனை படமாக்கவேண்டுமானால், வெலிக்கடை சிறையில் இரண்டு நாட்கள் அடுத்தடுத்து நடந்த படுகொலைகளையும் சித்திரிக்கவேண்டும். சாத்தியமற்ற அந்த முயற்சி கைவிடப்பட்டது.

பல நாடுகளில் சிறையுடைப்புகள் நடந்துள்ளன. அந்த உண்மைச்சம்பவங்களின் பின்னணியில் பல ஆங்கிலத் திரைப்படங்களை பார்த்திருப்போம். அத்தகைய ஒரு படத்தில், அமெரிக்காவின் அதிபராக பதவியேற்பதற்கு முன்னர் திரைப்பட நடிகராகவிருந்த டொனால்ட் ரேகன் நடித்திருக்கிறார்.

எந்தவொரு கதைக்கும் ஒரு முன்கதை - பின்கதை இருக்கும். அந்த முன்கதைக்கும் ஒரு முன்கதை - பின்கதை இருக்கும்! எனவே கதைகள் முடிவற்றவை. அதுபோன்றதுதான் ஈழப்போராட்டத்தின் கதைகளும்!

விடுதலைப் புலிகளின் லெப்டினன்ட் சீலன் (லூக்காஸ் சார்ள்ஸ் அன்ரனி) 1983 ஜுலை 15 ஆம் திகதி தென்மராட்சியில் நடந்த இராணுவ சுற்றிவளைப்பின் போது கொல்லப்படுகிறார். அதன் எதிரொலியாக திருநெல்வேலியில் அதே மாதம் 23 ஆம் திகதி வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் நடந்த தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதன் எதிரொலியாக கொழும்பில் வெலிக்கடை சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 35 பேர், அதே மாதம் ( ஜுலை) 25 ஆம் திகதி வெட்டியும் கொத்தியும் கொல்லப்பட்டனர்.

நீதிமன்ற விசாரணையில் மரணதண்டனைத் தீர்ப்பின்போது தன்னை தூக்கிலிட்டதும், தனது கண்களை தானமாக வழங்கவேண்டும் எனச்சொன்னவர் குட்டிமணி. அந்தக்கண்களில் தமிழ் ஈழத்தை காணமுடியும் என நம்பியிருந்தவர். ”என்னைத்தான் தூக்கிலிட முடியும். ஆனால், மலரப்போகும் தமிழ் ஈழத்தை எவராலும் தூக்கிலிட முடியாது” என்று நீதிமன்றத்தில் சூளுரைத்தவர் ஜெகன்.

அன்று கொழும்பில் பொரளையிலிருந்து கலவரம் வெடித்துப்பரவியது. மீண்டும் அதே மாதம் 27 ஆம் திகதி மேலும் 18 பேர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்களின்போது தமது உயிர்களை காத்துக் கொள்ள போராடியவர்களில் உயிர்தப்பிய ஒருவருடன் தான் அன்று பாரிஸிலிருந்து பேசிக்கொண்டிருந்தேன். அவரை அன்றுதான் முதல் தடவையாக பார்க்கின்றேன். எனது எழுத்துக்களை தொடர்ந்து படித்துவந்திருக்கும் அவர், வாசிப்பு அனுபவம் மிக்கவர். தான் படித்ததில் தனக்கு பிடித்தமானதை எனக்கும் அனுப்புவார். நாம் பரஸ்பரம் தோழர் என்று அழைத்துக்கொள்வோம்.

1843 ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வெலிக்கடை சிறையில், நாற்பது வருடங்களின் பின்னர் அந்த இரண்டு நாட்களும் நடந்த படுகொலைச் சம்பவங்களின்போது கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்:

**“ அன்று இலங்கைச் சிறை களிலிருந்து உயிர்தப்பியவர் களில் சிலர் பின்னாளில் முதலமைச்சராக, அமைச்ச ராக, தொடர்ந்தும் அரசியல் இயக்கங் களில் ஈடுபட்டவர்களாக, புலம்பெயர்ந்து சென்றவர்களாக இலங்கையிலும் இந்தியாவிலும் புகலிட நாடுகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.**

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, தேவன், நடேசன், சிவபாதம் மாஸ்டர், ஜெயரட்ணம், பாலசுப் பிரமணியம், அன்பழகன், சுரேஷ்குமார், அருந்தவராஜா, தேவக்குமார், சின்னையா, சிவானந்தராஜா, மயில்வாக னம், கந்தையா, உதயசீலன், ஈஸ்வரநாதன், நாகராசா, கணேசலிங்கம், சுதாகரன், இராமச்சந்திரன், மகேந்திரன், தில்லைநாதன், குலராஜசேகரம், உதயகுமார், சிவகுமார், சாந்தகுமார், சந்திரகுமார், ராஜன், அமிர்தலிங்கம், ராஜ யோகநாதன், கிருஷ்ணகுமார், தவராஜசிங்கம், உதயகுமார் ஆகிய 35 பேர்.

மூன்று நாட்களின் பின்னர் 28 ஆம் திகதி கொல்லப்பட்டவர்கள்: மருத்துவர் ராஜசுந்தரம், பாஸ்கரன், தேவகுமார், துரைராஜா, சர்வேஸ்வரன், குமார், மரியநாயகம், நீதிராசா, நவரட்ணசிங்கம், ராசேந்திரன், குமாரசிங்கன், சேயோன், ஜெயமுகுந்தன், சிவசுப்பிரமணியம், சிறிக்குமார், இராஜரட்ணம், மனோரஞ்சன், கணேசலிங்கன் ஆகிய 18 பேர்.

வெலிக்கடைச் சம்பவம், கொழும்பு கலவரம் ஆகியவற்றின் எதிரொலியாக இந்தியா ( இந்திரா) உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தங்களையடுத்து, ஏனைய தமிழ் அரசியல் கைதிகள் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர். அதே 1983 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி மட்டக்களப்பு சிறையிலிருந்து பலர் தப்பிச்சென்றனர். அவர்களில் ஒருவருடன்தான் அன்று நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

இச்சம்பவங்கள் நடந்த காலப்பகுதியில் வீரகேசரியில் பணியாற்றி, பெரும்பாலான செய்திகளை ஒப்புநோக்கியிருந்தமையால் பலவிடயங்கள் நினைவுக்கு வந்தன. அவர் வெலிக்கடை சிறை, மட்டக்களப்பு சிறை ஆகியவற்றின் உட்புற வெளிப்புறத் தோற்றங்களையும் விளக்கினார். அவர்கள் தடுத்துவைக்கபட்டிருந்த கூண்டுகளின் பிரிவுகள் பற்றியும் சொன்னார்.

பத்திரிகையாளர்கள் சரவணன், கார்மேகம் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உட்பட சிலர் வெலிக்கடை, மட்டக்களப்பு சிறைச்சாலை சம்பவங்கள் பற்றி எழுதியிருக்கின்றனர். சிறைகளைப் பின்னணியாக வைத்து பல நூல்கள் வெளியாகியிருக்கின்றன.

சிறைகளுக்குள் வாடியவர்கள் எழுதிய புத்தகங்கள் பிரசித்தமானவை. நேரு, இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் சிறையிலிருந்தவேளையில் தனது மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள், பின்னாளில் உலக சரித்திரம் என்ற நூலாக வெளியானது. நெல்சன் மண்டேலா தனது சிறை வாழ்க்கையை தனது சுயசரிதையான Long walk to freedom நூலிலும், கிரண்பேடி தனது சுயசரிதையில் (நான் துணிந்தவள்) திகார் சிறையில் பணியாற்றிய அனுபவங்களை யும் பதிவுசெய்துள்ளனர். ஜெயகாந்தன், தனது கைவிலங்கு நாவலையும் (காவல் தெய்வம் திரைப்படத்தின் மூலக்கதை) சி. ஏ. பாலன் தூக்குமர நிழலில் நாவலையும், இலங்கை யில் சி. புஸ்பராணி தனது சிறை அனுபவங்களை அகாலம் என்ற பெயரிலும் எழுதியுள்ளனர். மட்டக்களப்பு சிறை யிலிருந்து தப்பியவர்களில் ஒருவரான எஸ்.ஏ. டேவிட் அய்யாவும் Tamil Ealam Freedom Struggle (An inside Story) என்ற நூலை எழுதியுள்ளார். அவ்வாறே அன்று உயிர் தப்பிய இன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் ”ஈழப்போராட்டத்தில் மறைக்கப்பட்ட உண் மைகள்” என்ற நூலை வரவாக்கியுள்ளார்.

அன்று இலங்கைச் சிறைகளிலிருந்து உயிர்தப்பியவர்களில் சிலர் பின்னாளில் முதலமைச்சராக, அமைச்சராக, தொடர்ந்தும் அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டவர்களாக, புலம்பெயர்ந்து சென்றவர்களாக இலங்கையிலும் இந்தியாவிலும் புகலிட நாடுகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வெலிக்கடையில் தமிழ் அரசியல் கைதிகளை தாக்குவதற்கு முன்னின்ற பிரபல சேபால ஏக்கநாயக்க, இத்தாலிய விமானம் ஒன்றை கடத்துவதற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் சிறையிலிருந்த சிங்களக் கைதி.

1983 இல் வெலிக்கடை படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன்னால் நிறுத்தப்படவில்லை. ஆனால், அதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் பின்னரும் தொடர்ந் திருப்பதையும் மறக்கமுடியவில்லை.

1997 ஆம் ஆண்டு களுத்துறை சிறையிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்களக்கைதிகளி னால் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

2000 ஆம் ஆண்டில் பிந்துனுவெவ என்ற சிங்களப்பிரதேசத்தில் தடுப்பு முகாமிலிருந்த 21 தமிழ் அரசியல் கைதிகளும் கொல்லப்பட்டனர்.

தமிழ் ஈழ விடுதலைப்போராட் டத்தில் ஈடுபட்டு, பல உலக நாடு களில் நிகழ்ந்த விடுதலைப்போராட்டங்கள், புரட்சிகள் பற்றியெல்லாம் தெரிந்துவைத்துக்கொண்டு, எதிர்பாராத சூழ்நிலையில் கைதாகி, சித்திரவதைகளையும் அனுபவித்து, சிறையிலும் தடுத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து தப்பிச்சென்று பரதேசியாக அலைந்துழன்று இறுதியில் பிரான்ஸில் தஞ்சமடைந்திருக்கும் அந்தத் தோழர், சிறையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு தரப்படும் குடி தண்ணீரை சேமிப்பதிலும் சமர்த்தராக இருந்துள்ளார் என்பதையும் அவருடன் சிறையிலிருந்து தப்பிய மற்றும் ஒருவர் மூலம் அறிந்து வைத்திருந்தேன்.

அன்று 1983 ஆம் ஆண்டு தப்பியவர்கள் திசைகள் மாறிச் சென்றனர். சிலர் இன்று எம்மிடையே இல்லை. சிலர் இன்றும் தளராமல், அயற்சியுறாமல் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி அரசியல்தலைவர்களாக பிரகாசிக்கின்றனர்.

சிறை வாழ்க்கையில் உயிர்தப்பியவர்கள் தமிழ் இனத்திற்காக கொடுத்த விலை அதிகம். அந்தத் தோழருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது பிரான்ஸில்வதியும் ஷோபசக்தி, சாத்திரி ஆகியோரின் சில படைப்புகளும் நினைவில் சஞ்சரித்தன. **(11 ஆம் பக்கம் பார்க்க...)**

# இந்திய சிந்துஷாட்ரா நீர்மூழ்கி தூத்துக்குடி துறைமுகம் நோக்கிய வருகை வெளிப்படுத்தும் செய்தி ?

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்



**தூத்துக்குடி துறைமுகத்தில் ஒருவாரத்தில் நகர முயலும் நீர்மூழ்கிக்கப்பலால் பரபரப்பை ஏற்படுத்தலாமே அன்றி இந்தியாவால் நிரந்தர பாதுகாப்பை ஏற்படத்துவது கடினமானதாகவே அமையும். அதாவது மாலைதீவு, இலங்கை, மியான்மார் போன்ற பகுதிகளில் சீனாவின் கடற்பரப்பு மீதான பிரசன்னத்தை இந்தியாவால் தடுக்க முடியாது.**

தென்னாசிய அரசியலில் இந்தியா-சீனா போட்டி தன்மை அதிகரித்து வருகின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது. ஏறக்குறைய சீனாவின் வலு மேலோங்கியுள்ளதாகவே விமர்சனங்கள் எழுகின்றன. இது இந்தியாவின் பாதுகாப்பையும் தென்னாசியாவில் இந்தியா மேலோங்கியுள்ள நிலையையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது. தென்னாசியாவின் பிராந்திய வல்லரசான இந்தியா தனது தனித்துவத்தை இழந்திருப்பதோடு அதற்காக போட்டியிடுகின்ற நாடாக மட்டுமே தற்போது விளங்குகின்றது. ஆனால் ஊடகப்பரப்பில் இந்தியா பொறுத்து நம்பிக்கைகளும் அதன் பலம் சீனாவிற்கு சமமாக இருப்பதாகவும் வாதங்களும் எதிர் வாதங்களும் முன்வைக்கின்றது.

இலங்கைத்தமிழர்களை பொறுத்தவரை இந்தியா மீதான நம்பிக்கை முழுமையாக அற்றுப்போகாத நிலையில் பிராந்திய ரீதியில் இந்தியாவின் பலத்தை சீனா எதிர்கொண்டு வளர்ந்துவிட்டது என்ற எண்ணப்பாங்கு காணப்படுவது தவிர்க்க முடியாததாகும். இதன் நோக்கு நிலையிலேயே தூத்துக்குடி துறைமுகத்தை நோக்கி இந்திய நீர்மூழ்கிக்கப்பலின் நகர்வு பற்றிய செய்தி முக்கியத்துவப்படுகிறது. இக்கட்டுரையில் அத்தகைய செய்தியின் உண்மைத்தன்மையை தேட முற்படுகிறது.

இந்தியாவின் தென்பகுதியின் இலங்கையின் கடற்பரப்புக்கு அண்மையில் அமைந்துள்ள வா.உ.சிதம்பரநார் துறைமுகத்தில் ஐ.என்.எஸ் கட்டப்பொம்மன் கடற்படைக்கான கப்பல் தளத்தில் இந்திய நீர்மூழ்கி நிலைநிறுத்தி உள்ளது. இந்தியாவின் வலுமிக்க நீர்மூழ்கிகளில் ஒன்றான சிந்துஷாஸ்ட்ரா எனும் நீர்மூழ்கி கப்பல் போர் ஒத்திகைக்காகவோ அல்லது தொழில்நுட்ப கோளாறை சரிசெய்வதற்காகவோ அல்லது எண்ணெய் நிரப்பிக்கொள்வதற்காகவோ அல்லது அடிப்படை தேவைகளை நிரப்பீடு செய்வதற்காக நிறுத்தி இருக்கலாம் எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந் நீர்மூழ்கி அடுத்தவரும் ஒருவார காலப்பகுதியில் (19.07.2021-25.07.2021) தூத்துக்குடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் இச்செய்தி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்திய கடற்படை சார்பில் அதிகாரபூர்வ செய்திகள் எவையும் வெளியாகவில்லை.

ஆனால் ஊடகப்பரப்பில் இச்செய்தி அதிக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு முக்கிய காரணம் இந்தியாவின் கிழக்கு கடற்கரை பகுதி அண்மைக்கால கட்டத்தில் விரிவாக்கப்பட்டதோடு கடலோர பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் கடலோர பாதுகாப்பு தளங்கள் உருவாக்கப்பட இருப்பதாகவும் இப்பிராந்திய கடற்பரப்பில் சீனாவின் நகர்வை கண்காணிப்பதற்கும் ஆளில்லாத விமானங்களையும் மற்றும் விமானங்களையும் இந்தியா கண்காணிப்பில் ஈடுபடுத்தப்போவதாகவும் சில திட்ட மிடல்களை முன்வைத்தள்ளது. அதே நேரம் நாகபட்டினம் முதல் கன்னியாக்குமாரி வரையிலான கிழக்கு கடற்கரைசாலை இராணுவ தளபாடங்களை எளிதாக பரிமாற்றிக்கொள்ள சாலை விஸ்தரிப்பு திட்டத்தை உருவாக் கிய தோடு தேவையேற்படும் போது போர் விமானங்களை இச்சாலைகளிலும் இறக்குவதற்கும் இந்திய பாதுகாப்பு தரப்பு திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதுமட்டுமன்றி இந்தியாவினுடைய தென்பகுதியில் அமைந்திருக்கும் அணுமின்நிலையங்கள், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையங்கள், விண்வெளி ஏவுதளங்கள் போன்றவற்றை பாதுகாக்கும் விதத்தில் இந்தியா கரிசனை கொள்ள வேண்டிய நிலை எற்பட்டுள்ளது. ஆனால் ஊடகங்களில் காட்டப்பட்டுள்ள முக்கியத்துவத்தக்கு ஈடாக இந்திய நீர்மூழ்கிக்கப்பல்களின் தூத்துக்குடி வருகையினால் கடற்பிராந்தியத்திலும் தென்னாசிய நாடுகள் மத்தியிலும் சீனாவின் பிரவேசத்தை கட்டுப்படுத்த முடியுமா? என்ற கேள்வி இயல்பானது.

இதனால் சீனா தனது நகர்வுகளை மட்டுப்படுத்தி கொள்ளுமா? என்பதுவும் பிரதான அம்சமாக உள்ளது. அதனை விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது, தூத்துக்குடி துறைமுகத்தை நோக்கி இந்திய நீர்மூழ்கியின் நகர்வு அவசியமானதும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தாகவும் உள்ளமைக்கான காரணம் புவிசார் அரசியல் ரீதியில் சீனாவின் பிரசன்னம் தடுப்பதற்கான தாகவே அமைந்திருத்தல் வேண் டும். இந்தசமுத்திரத்தின் மிகமுக்கியமான கடற்பிரதேசமாக விளங்கும் வங்காள விரிகுடாவை அண்டி சீனாவின் கடற்படை நடமாட்டமும் நீர்மூழ்கிகளின் வருகையும் கடந்த ஒரு தசாப்தகாலமாக நிகழ்ந்து வருகிறது. ஆனால் ஊட கப்பரப்பும் பத்தி எழுத்துக்களும் அதுதொடர்பில் அதிக அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன. இதனை இந்தியா எதிர்கொள்ளுதல் என்பது அதற்கெதிராக கடற்படை பலத்தையும், இராணுவ பலத்தையும் நிலைநிறுத்தி சீனாவின் இராணுவ நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே அத்தகைய தகவல்களின் வெளிப்பாடு. ஆனால் இந்தியாவின் பாதுகாப்பு கொள்கைகளோ அல்லது உபாயங்களோ காலம் பிந்திய நகர்வுகளையே முன்னெடுத்தமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இரண்டாவது, தூத்துக்குடி துறைமுகத்தில் ஒருவாரத்தில் நகர முயலும் நீர்மூழ்கிக்கப்பலால் பரபரப்பை ஏற்படுத்தலாமே அன்றி இந்தியாவால் நிரந்தர பாதுகாப்பை ஏற்படத்துவது கடினமானதாகவே அமையும். அதாவது மாலைதீவு, இலங்கை, மியான்மார் போன்ற பகுதிகளில் சீனாவின் கடற்பரப்பு மீதான பிரசன்னத்தை இந்தியாவால் தடுக்க முடியாது. எவ்வளவுக்கு இந்தியாவின் வடபகுதி கடற்படை தளங்கள் பாதுகாக்கப்படுகின்றதோ அதே அளவான முக்கியத்துவங்கள் தென்பகுதி துறைமுகங்களிலும் கடற்படை தளங்களிலும் இந்தியா முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மூன்றாவது, தூத்துக்குடி துறைமுகத்தில் பாதுகாப்பை பலப்டுத்தல் என்பத அந்தமான், நிக்கோபார் மற்றும் கொச்சி துறைமுகத்தை மாத்திரமின்றி தென் மாகாணங்களில் குவிந்துள்ள இந்தியாவில் தொமில்நுட்ப ஆற்றல் மையங்கள் பாதுகாக்க உதவும். அத்தகைய பாதுகாப்பு பொறிமுறையே மிகமிக அவசியமானதொன்றாக ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அல்லது மாலைதீவில் அல்லது மியான்மரில் சீனாவின் தலையீட்டை தடுப்பது என்பதற்கு அப்பால் இந்தியாவிற்குள் சீனாவால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளிலிருந்து மீளுதல் என்பது மிக அவசியமானதொன்றாக உள்ளது. எனவே அத்தகைய பாதுகாப்பு உத்திகளை இந்தியா மேற்கொள்கின்ற விதத்திலேயே தூத்துக்குடி நோக்கிய தனது நகர்வை திட்டமிட்டுள்ளது.

நான்காவது, இந்தியாவின் தென்பகுதியில் அமைந்திருக்கின்ற தொழில்நுட்ப மையங்களை நோக்கி சீனாவின் சைபர் தாக்குதல் மிகப்பிரதான நடவடிக்கையாக எதிர்காலத்தில் அமைய வாய்ப்புள்ளது. சீனாவின் சைபர் தாக்குதலால் உலக வல்லரசான அமெரிக்காவே நெருக்கடியை எதிர்கொள்கின்ற போது இந்தியா அதனை எதிர்கொள்வது மிகக்கடினமானதொன்றாக அமையும். 21ஆம் நூற்றாண்டு போர் என்பது சைபர் போர் என்றே பல இராணுவ வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். அத்தகைய சூழல் ஒன்று அமையுமென்றால் இந்தியா பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். அதிலும் குறிப்பாக அண்டவெளி தொழில்நுட்பத்தையும், அணுமின் உற்பத்திகளும் குவிந்துள்ள தென்மாகாணங்கள் தொழில்நுட்பம் மற்றும் மென் தொழில்நுட்ப தளத்திலும் இந்தியாவுக்குள் முன்னணி பெற்று இருப்பதனால் சீனாவின் நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும்.

ஐந்தாவது, இந்தியாவின் கிழக்கு நோக்கிய அல்லது தென்மாநிலங்களை நோக்கிய நகர்வானது தனது நிலத்தையும் எல்லைகளையும் பாதுகாக்கின்ற ஒரு சூழலுக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது என்ற செய்தி வெளிப்படுத்துகின்றது. பாரிய கண்காணிப்பையும் அவதானிப்புக்களையும் தொடர்ச்சியான உத்திகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இந்திய விமானப்படை கடற்படை தரைப்படை நகர்த்தப்பட்டுள்ளது. அதாவது இந்தியா தேசத்தின் பாதுகாப்பை மட்டுமே பராமரிக்கும் நிலைக்குள் இந்திய இராணுவ நகர்வுகள் சாத்தியமாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. அதிலும் பெரும் குறைபாடுகளும் இந்தியா இராணுவம் கொண்டிருக்கின்றது என்ற செய்தியை தவிர்த்துவிட முடியாது. பிரான்ஸ் இடமிருந்து கொள்வனவு செய்த ரபால் போர் விமானங்களிலில் நிகழ்ந்த ஊழலை விசாரிக்க பிரான்ஸ் குழுவொன்றை அமைத்துள்ளது என்ற செய்தியை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆறாவது, இந்தியாவின் தென்னாசிய நோக்கிய விஸ்தரிப்பு குறைபாடுகளும் இந்திய தேசிய பாதுகாப்போடு ஒப்பிடுகின்ற விதத்தில் இரண்டாம் நிலைக்கு உட்பட்ட அம்சமாகவே உள்ளது. தென்னாசிய நாடுகள் மீது உலகில் எந்த இராணுவமும் எத்தகைய நகர்வை மேற்கொண்டாலும் இந்தியாவால் தடுத்து நிறுத்த முடியுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பின்லேடன் மீதான அமெரிக்க தாக்குதல் இதற்கானதொரு ஆரம்ப புள்ளியாகவே தெரிகிறது. அவ்வாறானதொன்றே ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க கூட்டுப்படை யுத்தம். இத்தயை நகர்வுகள் இதர தென்னாசிய நாடுகள் மீது நிகழ்ந்தாலும் அதனை தடுத்து நிறுத்தம் எந்தவொரு வழிமுறையும் இந்தியாவிடம் இல்லை என்பதுவே தூத்துக்குடி உட்பட கிழக்கு கடற்கரைசாலை விஸ்தரிப்பதன் மறைமுகச் செய்தியாகும்.


எனவே, சீனாவிற்கு எதிரான இந்தியாவின் முனைப்புக்கள் அனைத்தும் இந்திய தேசத்தை தக்க வைப்பதற்காகவே அன்றி தென்னாசியாக்கான பார்வை கிடையாது. அதன் ஒர் அங்கமே தூத்துக்குடி துறைமுகம் நோக்கிய இந்திய நீர்மூழ்கிக்கப்பலின் நகர்வு அமைந்துள்ளது. அதனால் பிராந்திய ரீதியிலான தலைமைக்குரிய வலுவை இந்தியா இழந்திருப்பதோடு அத்தகைய வெற்றிடத்தை சீனா நிரப்பியுள்ளதையும் மறுபக்கத்தில் தென்னாசிய நாடுகளின் பாதுகாப்பே இந்தியாவின் பாதுகாப்பு என்ற நிலை முடிவுக்கு வந்து இந்தியாவின் எல்லைகளை பாதுகாப்பதே இந்தியாவை பாதுகாக்கும் முறை எனும் நிலை ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகம் நோக்கிய சிந்துஷாட்ரா-இன் வருகை ஊடகங்களில் பரபரப்பானமைக்கு காரணம் ஊடகத்தரப்பினரிடம் இந்தியாவின் எழுச்சி ஊக்குவிக்கப்பட வெண்டுமென்ற அவாவாகும். எனினும் அதனை இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களோ, பாதுகாப்பு நிபுணர்களோ புரிந்து கொள்வதாக தெரியவில்லை. மாறாக மாற்று கருத்தை இந்தியாவின் எதிர்ப்புவாதமாக காட்ட முயலுவதனூடாக அவ்விடயத்தை நகர்த்தி செல்ல முயலுகிறார்கள். இதுவே தென்னாசியா மீதான இந்தியாவின் கொள்கை தோல்வியடைய காரணமாகவுள்ளது.

- நன்றி: அருவி ■

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

29) மாணவர் குழுவொன்று அதிகமாக விரும்பும் பழங்கள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




| பழங்கள் | விரும்பும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| மாம்பழம் | 12 |
| கொய்யாப்பழம் | 08 |
| தோடம்பழம் | …… |
| வாழைப்பழம் | 06 |

i) அட்டவணையை அவதானித்து வரைபினைப் பூர்த்தி செய்க.
ii) வரைபினை அவதானித்து அட்டவணையைப் பூர்த்தி செய்க.

- **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் 3ம் படி நிலையைக் காட்டும் படம்
1. 
2. 
3. 

31) மனதை இதப்படுத்தும் செயற்பாடுகளின் இறுதிப்படிநிலை யாது?
1. உடலைத் தளர்த்துதல் 2. மலர்வு 3. திடசித்தம்

32) எமது நாட்டு தேசிய கீதத்தில் உள்ள பாடல் வரிகளின் எண்ணிக்கை
1. 29 2. 25 3. 27

33) குப்பை கூளங்களை உரியவாறு அகற்றி சூழலை சுத்திகரித்தற் செயற்பாட்டில் ஈடுபடுவர்கள்
1. மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்
2. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
3. உள்ளூராட்சி நிறவன ஊழியர்கள்

34) தாவர இலைகளை மடித்துக் கூடமைத்து வாழும் பிராணி
1. முசறு 2. மயிர்க்கொட்டி 3. கும்பிடுபூச்சி

35) வெடித்துப் பரம்பலடையும் வித்துக்களின் தொகுதி
1. பருத்தி, காசித்தும்பை
2. துத்திரி, ஆடையொட்டி
3. பாக்கு, சீதேவியார்செங்கழுநீர்

36) அந்நியர் ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் பிரதான தளபதியாகச் செயற்பட்டமையால் மலாக்காவிற்கு நாடு கடத்தப்பட்டவர்.
1. மொனராவில கெப்பட்டிப் பொல திசாவை
2. கொங்காலே கொட பண்டா
3. மொல்லி கொடி திசாவ

37) வண்ணத்துப்பூச்சி முட்டைகளை இடுவது
1. தாவர இலைகளின் மேற்பரப்பில்
2. பூக்களின் மகரந்த மணிகளில்
3. தாவர இலைகளின் கீழ்ப்புறத்தே

38) எமது நாட்டிற்கே உரித்தான பறவைகள்
1. சபன்கோழி, கொக்கு
2. மயில், கொக்கு
3. காட்டுக்கோழி, சபன் கோழி

39) தாள்களைத் துளையிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்
1. பிணை கருவி 2. துளைகருவி 3. அடிமட்டம்

40) உணவு வேளை ஒன்றில் ஈற்றுணவாக உண்ணப் பொருத்தமான பழம்
1. தோடம்பழம் 2. விளாம்பழம் 3. வாழைப்பழம்

41) பலாக்காய், ஈரப்பலாக்காய், தானியவகை போன்றவற்றில் அதிகளவு அடங்கியுள்ள போசணைக் கூறு
1. காபோவைதரேற்று 2. புரதம் 3. இலிப்பிட்டு

42) சிறிய தீக்காயங்களுக்கு மூலிகையாகப் பயன்படுத்தக் கூடிய செடி
1. கற்பூரவள்ளி 2. கீழ்க்காய்நெல்லி 3. கற்றாளை

43) பின்வரும் நோய்களுள் அண்மைக்காலங்களில் கொள்ளை நோயாகக் கருதப்படுவது
1. பிளேக் 2. கொவிட் - 19 3. டெங்கு

44) நீராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் தொகுதி
1. இட்லி, இடியப்பம், பிட்டு
2. தோசை, அப்பம், ரொட்டி
3. மோதகம், சாதம், பிட்டு

45) தற்காலத்தில் நீரைச் சுத்தகரிப்பதற்காகச் செய்யும் முறை
1. கரிக் கட்டியை நீரில் இடுதல்
2. நீர் வடிகட்டியைப் பயன்படுத்தல்
3. துணியினூடாக வடித்தல்

46) கடதாசிகளை மடித்து பிராணிகளின் ஆக்கங்களைச் செய்யும் முறை
1. மொசாக் 2. அல்ப்பனா 3. ஓரிகாமி

47) உலகிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் உரிய உரிமை
1. கல்வி கற்றல்
2. வேலைக்குச் செல்லல்
3. பிறநாடுகளுக்குச் செல்லல்

# மணல் கடத்தல்காரர்கள் மீது துப்பாக்கி சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்., அரியாலை பூம்புகாரில் உழவு இயந்திரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரைப் பொலிஸார் மறித்த போதும் நிறுத்தாமல் சென்றதனால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதனால் உழவு இயந்திரம் தடம் புரண்ட நிலையில் அதில் பயணித்த மூவரும் தப்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தப்பி ஓடியவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மணல் கடத்தல்காரர்களினால் கைவிடப்பட்ட மணல் ஏற்றிய பெட்டியுடன் உழவு இயந்திரம் மற்றும் பக்க இயந்திரம் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. (இ - 03)





## வவுனியாவில் முகச்சவரம் செய்யும் நிலையத்தில் மூவருக்குத் தொற்று

வவுனியா, ஜூலை 25

வவுனியா சந்தை வீதியில் அமைந்துள்ள முகச்சவரம் செய்யும் நிலையத்தில் பணிபுரியும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து குறித்த வீதியுடனான போக்குவரத்து, இராணுவத்தால் துண்டிக்கப்பட்டு, தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குச் சுகாதார பரிசோதகர்களால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## விபத்துக்களில் எண்மர் மரணம்



கொழும்பு, ஜூலை 25

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 8 பேர் உயிரிழந் துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூவர் பாதசாரிகள் என்றும், மூவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

மேலும், இருவர் ஓட்டோக்களில் பயணித்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பற்ற பயணம் மற்றும் கவனயீனம் காரணமாகவே அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில்

# டயகம சிறுமிக்கு நீதி கோரி யாழில் பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

**நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிசெய்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த டயகமவைச் சேர்ந்த சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**






மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 9.30 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் பேரணியாகப் புதிதாக கட்டப்பட்டுள்ள பஸ் நிலையம் வரை சென்று நிறைவடைந்தது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், மகளிர் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ - 03)



## தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 121 பேர் கைது

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 121 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 51 ஆயிரத்து 859 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணத் தடைகளை மீறி மாகாண எல்லையைத் தாண்டி, 235 வாகனங்களில் நேற்றுப் பயணித்த 584 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (இ)

# வெலிக்கடை சிறை படுகொலை...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

சாத்திரியின் அவலங்கள் கதைத் தொகுப்பில் ஒரு பாத்திரம் இவ்வாறு பேசும்:

"இயக்கத்துக்கு போகேக்குள்ளை இருபது வயது. பதினைஞ்சு வருசம் இயக்க வாழ்க்கை. இரண்டரை வருசம் தடுப்பும் புனர்வாழ்வும். இப்ப வயது முப்பத் தெட்டை எட்டித்தொடப்போகுது. ஒற்றைக்கண்ணும் இல்லை. வசதியும் இல்லை. இப்பவெல்லாம் மனசுக்கு முடியாதெண்டு தெரியிற எதையும் நான் முயற்சிக்கிறேல்லை."

அவலங்கள் தொகுப்பு பற்றிய எனது வாசிப்பு அனுபவக்குறிப்பினை பின்வருமாறு தொடங்கியி ருந்தேன். " ஈழத்திற்கான போரைத்தொடங்கியவர்களில் பலர் இன்றில்லை. அவர்களைப்பின்பற்றியவர்கள் பரதேசிகளாக சென்றுவிட்டனர். சென்றவிடத்தில் ஈழத்தின் நினைவுகள் துரத்திக்கொண்டிருக்கின்றன.

சாதாரண மனிதனாக இருந்தால் அந்த நினைவுகள் வரும்போதெல்லாம் நீண்ட பெருமூச்சை காற்றில் பரவச்செய்து விட்டு மற்றவேலைகளைக் கவனிக்கலாம்.

ஆனால், சாத்திரி போன்ற எழுத்தாளர்களினால் அவ்வாறு இருக்க முடியவில்லை. அவர்களின் ஆழ்ந்த பெருமூச்சுக்கள்தான் கதைகளாக வெளியே தள்ளப்படு கின்றன. எழுத்தில் பதிவாகிவிடுகின்றன."

அன்று நான் சந்தித்த தோழர் எழுதக் கூடியவர். ஆனால், தன்னை எழுத்தாளனாக மாற்றிக்கொள்ளாமல், தேர்ந்த வாசகனாகவே வாழ்ந்து வருகிறார். அவரே என்னிடம் வந்து, பாரிஸில் சில நண்பர்களிடம் அழைத்துச்சென் றார். நீண்டபொழுதுகள் அவருடன் உரையாடியபோது, 1999 ஆம் ஆண்டில் சபாலிங்கம் நினைவாக நண்பர்கள் வட்டம்பிரான்ஸில்வெளியிட்ட தோற்றுத்தான்போவோமா? தொகுப்பும் நினைவில் சஞ்சரித்தது. அந்தத் தொகுப்பை எனக்கு அனுப்பிவைத்த புஸ்பராஜாவும் இன்றில்லை!

அகிம்சைப்போர், ஆயுதப்போர், ராஜதந்திரப்போர் என்று சொல்லும் சமகாலத் தமிழ்த்தலைவர்களின் வார்த்தை ஜாலங்களுக்கும், ஊடகங்களில் அவர்கள் நடத்தும் காகிதப்போர்களுக்கும் மத்தியில் ஈழப்போராட் டத்தின் தொடக்கத்தையும் இன்று அதன் பரிமாணத் தையும் பற்றி அந்தத் தோழர் எனக்கு விபரித்தார்.

ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் நூலை எழுதிய சி. புஸ்பராசா மறைவதற்கு முன்னர் எழுதிய பின்வரும் வரிகளும் நினைவுக்கு வருகின்றன:

"அனைத்தும் சிதைந்து போய்விட்டது - எனது கனவுகள் போல் எனது நம்பிக்கைகள் போல் - இப்போது எனது வாழ்வுபோல் அனைத்தும் சிதைந்து போய்விட்டது "

சமகாலத்தில் இலங்கையில் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த கொலைக்குற்றவாளிகள் - மரண தண்டனை தீர்ப்பின் பிரகாரம் சிறையிலிருந்தவர்கள் ஜனாதிபதியின் பணிப்புரையில் பொதுமன்னிப்பில் விடுதலையாகின்றனர். அவ்வாறு விடுதலைபெற்ற ஒரு வர் அரசின் வீடமைப்பு அதிகார சபைக்கு தலைவராகின்றார்.

இன்றைய அரசின் இந்த வேடிக்கைகளை அன்று சிறைகளில் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளின் ஆத்மா பார்த்துக்கொண்டிருக்கும் என்ற குருட்டு நம்பிக்கையுடன், அந்த ஆத்மாக்களுக்கே இந்தப் பதிவை சமர்ப்பிக்கின்றேன். ■




# எடப்பாடிக்கு அச்சுறுத்தலாக சசிகலாவைத் தூண்டும் பா. ஜ. க.

**போர்** முடிந்தபிறகு ஒரு நல்ல கமாண்டர், போர்க்களத்தில் நடந்தவற்றைத் தெளிவாக ஆராய்ந்து, எந்தெந்த பலன்கள், பிரச்சனைகளால் லாபமும் நஷ்டமும் ஏற்பட்டன என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம். துல்லியமான அந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, ஏற்பட்ட பலன்கள் பல மாதங்கள், ஆண்டுகள் வரை நீடித்து நிலைப்பதற்கும், வீழ்த்தப்பட்ட எதிரி இனிமேல் மீண்டு வராதபடியும் திட்டங்களை வகுக்கவேண்டும். நஷ்டங்கள் குறித்த விமர்சனம் இருக்கும்பட்சத்தில், போர்த் தந்திரங்களில் உள்ள ஓட்டைகளை சரிசெய்வதற்காக வல்லுநர்களிடம் ஆலோசனை பெற்று, தோற்றுப்போன தளபதிகளையும் வீரர்களையும் வெளியேற்றிவிட்டு, படைகளுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும். அப்போதுதான், இழந்த மானத்தை மீட்பதற்கான அடுத்த போருக்குத் தயாராக முடியும்.

கௌடில்யரும் மாக்கியவல்லியும் இருந்த காலம் முதலே, தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு கையேட்டின் சுருக்கம் இது. இது, அரசியலுக்கும் பொருந்தும். இப்போதைய ஜனநாயகம் அனல்பறக்கும் தேர்தல் யுத்தங்களுடைய சாம்பலின்மீதுதான் அமைக்கப்படுகிறது.

ஆக்ரோஷமான இந்த அரசியலின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு அறிந்தவர் தி. மு. க தலைவர் ஸ்டாலின். விடுதலைக்குப் பின்னரான இந்திய அரசியல் களத்தின் அறிவுக்கூர்மையுள்ள சாணக்கியர்களில் முக்கியமானவரான மு. கருணாநிதியால் பயிற்றுவிக்கப்பட்டவர் ஸ்டாலின். ஏப்ரல் 6 நடந்த தேர்தல் யுத்தத்தில் அ. இ. அ. தி. மு. க. வின் எடப்பாடி கே. பழனிச்சாமியிடமிருந்து அரியணையைப் பறித்த அடுத்த நொடியிலிருந்தே, தனது லாபங்களை ஒன்றுதிரட்டுவதில் ஸ்டாலின் முழு முனைப்பு காட்டினார். தொடர்ந்த அரசியல் மற்றும் நிர்வாக செயல்களின்மூலம் எதிரியை செயலிழக்கச் செய்வது தொடங்கி, தீவிரமான திமுக எதிர்ப்பாளர்களிடமிருந்தும் நற்பெயரை வாங்கிவருகிறார்.

இப்போதைக்கு இந்தக் குழப்பமான அரசியலைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிடலாம். ஒரு நேர்மறையான சிந்தனையோடு, ஜுலை 20ஆம் தேதி (புதன்கிழமை) நடந்த ஒரு சந்திப்பில் தொழிலதிபர்களோடும் முதலீட்டாளர்களோடும் முதல்வர் பேசியவற்றை கவனிப்போம். முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் காலடி எடுத்துவைப்பதற்கான ஒற்றை சாளர முறையை வழங்கும் 2.0 என்ற இணையவழி முகப்பை ஸ்டாலின் அறிமுகம் செய்துவைத்தார்.


"முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" என்ற, கவர்ந்திழுக்கும் வாசகத்தோடு இது வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உற்பத்தி மற்றும் தொழில் மையங்களைத் தொடங்க நினைக்கும் அனைவருக்கும் ஆதரவு தரப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார். அளவுக்கதிகமான வஞ்சத்திற்கு அப்பால் இதுபோன்ற உறுதிமொழிகள் எதையும் கொண்டுவரவில்லை என்றும், தொடர்ந்து பல தமிழக முதல்வர்கள் சொன்னதுதான் இது என்றும் தோன்றலாம். ஆனால், உண்மையிலேயே தனது மாநிலம் முன்னேறவேண்டும் என்று நினைக்கும் ஒரு முதல்வரின் வார்த்தையாகவே இது பார்க்கப்பட்டது. தொழிலதிபர்களும் இதை நல்லவிதமாகவே எதிர்கொண்டனர். "இதே நேர்மறைப் பாதையில் முதல்வர் தொடர்ந்து பயணித்தால் தமிழ்நாட்டில் நல்லது நடக்கும்" என்று ஒரு தொழிலதிபர் நண்பர்களிடம் குறிப்பிட்டார்.

அரசியல் ரீதியாக திமுக வாக்கு வங்கியில் உள்ள பலவீனமான இடங்களை ஸ்டாலின் கண்டறிந்திருக்கிறார். கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், தர்மபுரி போன்ற மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்குப் பகுதியில் வலுவான ஆதரவைத் திரட்ட அவர் கடினமாக உழைத்துக்கொண்டிருக்கிறார். வடமேற்குத் தமிழகத்தின் கொங்குப் பகுதியில் கவுண்டர் சமூகத்தினரின் ஆதிக்கம் அதிகம், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் இந்த சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கமல்ஹாசனின் மக்கள் நீதி மையத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் மகேந்திரனை சமீபத்தில் கட்சிக்குள் இழுத்துக் கொண்ட ஸ்டாலின், அடுத்தடுத்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் (சசிகலா-தினகரன் கட்சி), அஇஅதிமுக உட்பட பல கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களையும் தன் பக்கம் இழுத்துக்கொண்டிருக்கிறார். சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் சில நாட்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியில், ராமநாதபுரம்&கன்னியாகுமரியைச் சேர்ந்த சிலரைத் தவிர, கொங்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் திமுகவில் இணைந்திருக்கின்றனர். இப்படி, "புலம்பெயர்ந்தவர்களின்" சார்பாகப் பேசிய முன்னாள் அஇஅதிமுக அமைச்சர் நடராஜன், "அஇஅதிமுகவை நிறுவிய எம்.ஜி.ஆரின் கருத்துக்களுக்கு எதிராக எடப்பாடி பழனிச்சாமி செயல்படுகிறார். அவர் கட்சியையே ஒரு தனியார் வணிக நிறுவனமாக மாற்றிவிட்டார்" என்று குற்றம் சாட்டினார்.

## அரசியலின் அடிப்படைத் தத்துவத்தை அறிந்து செயல்படுகிறார் ஸ்டாலின்

எதிர் முகாமிலிருந்து ஆட்களை இழுக்கும் இந்தப் போட்டியில் எடப்பாடிக்கும் ஒரு சிறு ஆறுதல் பரிசு கிடைத்திருக்கிறது. அமமுகவின் செய்தித் தொடர்பாளரான டாக்டர் ஜமீலா, சசிகலா-தினகரனின் தலைமை அஇஅதிமுகவை கபளீகரம் செய்யும் ஒற்றைக் குறிக்கோளோடு மட்டுமே செயல்படுகிறது என்றும் உருப்படியாக ஒன்றும் நடப்பதில்லை என்றும் குற்றம் சாட்டி, அக்கட்சியிலிருந்து விலகி அஇஅதிமுகவில் சேர்ந்தார்.


- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

அவரை எடப்பாடி பழனிச்சாமி வெற்றிகரமாக அஇஅதிமுகவுடன் இணைத்திருக்கிறார். சசிகலா மீண்டும் அஇஅதிகுமவில் இணைய வாய்ப்பில்லை என்றும், கட்சிக்குள் எல்லாம் சரியாகவே இருக்கிறது என்றும் பேசினார்.

ஜெயலலிதாவுக்குப் பின்னான அதிகார இழுபறி உச்சகட்டத்தில் இருக்கும்போது, சசிகலா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஊழல் வழக்கில் விதிக்கப்பட்ட நான்கு ஆண்டு சிறைத் தண்டனை முடிந்து ஜனவரியில் பெங்களூரு சிறையிலிருந்து வெளிவந்தவர், கட்சி விசுவாசிகளிடம் தான் பேசிய அலைபேசி உரையாடல்களை ஒலிக்கோப்புகளாக வெளியிட்டு வருகிறார். இது, ஊடக மற்றும் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இவரது ஓடியோக்களில் சொல்லப்படும் சில விஷயங்கள் கேட்கவே அசிங்கமாக இருக்கின்றன. முக்கிய அரசியல் விஷயங்களில் எம்.ஜி.ஆர் தன்னிடம் ஆலோசனை கேட்பார் என்கிறார். ஜெயலலிதா ஆதரவுக் குழு - ஜானகி ஆதரவுக் குழு என்று இரண்டாகப் பிரிந்திருந்த அஇஅதிமுகவை ஒன்றிணைப்பதற்காக, தன்னை ஜெயலலிதா ஜானகியிடம் தூது அனுப்பினார் என்கிறார். ஜெயலலிதாவுக்கோ கட்சிக்கோ எந்த பிரச்னையும் வரக்கூடாது என்பதால் அவரது அரசியல் வாழ்வில் கூடவே நின்று வழிநடத்தியதாகக் கூறுகிறார்.

மெரினா கடற்கரையில் உள்ள அம்மா ஜெயலலிதாவின் சமாதிக்கு சென்றுவந்தபிறகு அடுத்த ஓரிரண்டு வாரங்களில் சின்னம்மாவான சசிகலா மீண்டும் அரசியலுக்குள் வருவார் என்கின்றன அமமுக வட்டாரங்கள். "அஇஅதிமுக பிரபலங்களை வீட்டுக்கு அழைத்து அவர் எதிர்காலத்தைப் பற்றி விவாதிப்பார். அவர்கள் ஆதரவு கிடைக்காவிட்டால் அரசியல் பிரவேசம் ரத்து செய்யப்படும்" என்கிறார் ஒருவர்.

பெயர் வெளியிட விரும்பாத ஒரு அஇஅதிமுக தலைவர் ஒருவர், "உண்மையில் அவர் சிறையிலிருந்த போது எங்களால் சுதந்திரமாக கட்சியையும் ஆட்சியையும் நடத்திக்கொள்ள முடிந்தது. ஒவ்வோர் அரசாங்க ஒப்பந்தத்திலும் திட்டத்திலும் சின்னம்மாவுக்குக் கப்பம் கட்டத் தேவை இருக்க வில்லை. அந்த நிம்மதி எங்களுக்கு நீடிக்கட்டுமே. ஏன் திரும்ப அவரை உள்ளே சேர்க்கவேண்டும்?" என்று கேட்கிறார்.

மேலும் பேசிய அவர், சசிகலாவின் இந்த நாடகத்துக்குப் பின்னால் பாஜக இருக்கிறது என்கிறார். "தேர்தலில் திமுகவை வீழ்த்துவதற்காக அஇஅதிமுகவின் இரு பிரிவுகளையும் இணைக்க வேண்டும் என்று பாஜக முடிந்தவரை முயற்சி செய்தது. ஆனால், எடப்பாடி இதைக் கடுமையாக எதிர்த்தார். சசிகலாவை மீண்டும் கட்சிக்குள் வரவிட்டால் அவர் முழுமையாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடுவார் என்றும், முதல்வராக ஈட்டிய பணமும் கைவிட்டுப் போய்விடும் என்றும் அவர் பயந்தார். அஇஅதிமுக-பாஜக கூட்டணி நிச்சயம் வெல்லும் என்றும் சசிகலா உள்ளே வந்தால் அது பிரச்னையில்தான் முடியும் என்றும் அவர் பாஜகவிடம் வாதிட்டார். இப்போது, தோல்விக்குப் பின்னர் அவரது தலைமைக்கு அச்சுறுத்தலாக பாஜக சசிகலாவைத் தூண்டுகிறது. சசிகலாவின் தலைமையில் அஇஅதிமுகவை ஆட்கொள்ள பாஜக முனைகிறது. அது எடப்பாடிக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறது" என்று விரிவாகப் பேசுகிறார்.

சசிகலாவின் ஓடியோக்கள் ஸ்டாலினின் செவிகளுக்கு இனிய சங்கீதமாக நிச்சயம் மகிழ்ச்சியளிக்கக்கூடும். "திடீரென்று அஇஅதிமுக தலைமையகத்தில் சசிகலா நுழைந்து, அதனால் பிரச்னை வெடிக்கும்பட்சத்தில் காவல்துறை அதைக் கண்டும் காணாததுபோல் நடந்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்கிறார் ஒரு கட்சிப் பிரமுகர்.

இந்த வாரப் பதிவை நிறைவு செய்யுமுன் ஒரு மகிழ்ச்சியான செய்தியை "ஈழநாடு" நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான்கு மாதங்களில் இல்லாத அளவுக்கு இந்தியாவின் கோவிட்-19 தொற்று எண்ணிக்கை குறைந்திருக்கிறது. ஜுலை 19இல் 30,093 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது, 374 பேர் இறந்தனர். 30,000க்கும் கீழான தொற்று எண்ணிக்கை மார்ச் மாதத்தில்தான் (மார்ச் 16) காணப்பட்டது. ஆனால், செப்ரெம்பர் இறுதியில் வரப்போகிற மூன்றாம் அலை மிக மோசமானதாக இருக்கும் என்றும், 97.32% குணமடைவோர் விகிதத்தை அது பெருமளவில் கீழே கொண்டு போகும் என்றும் சொல்லும் கணிப்புகள் அச்சத்தைத் தருகின்றன.

## டோக்யோ ஒலிம்பிக் விழா:





# ஜப்பான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன?

பரபரப்புகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகளின் திறப்பு விழா தொடங்கியுள்ளது.

கொரோனா தொற்று பரவல் காரணமாகக் கடந்த வருடம் நடைபெற வேண்டிய போட்டிகள் இந்த ஆண்டு நடைபெறுகின்றன.

இந்த வருடமும் கொரோனா தொற்று பரவல் அச்சத்திற்கு மத்தியில்தான் ஜப்பான், ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. ஒலிம்பிக் நிகழ்ச்சியில் பங்கேற்கும் போட்டியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் என இதுவரை 80 பேருக்கு மேல் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதில் பலர் போட்டிகள் நடைபெறும் இடத்தில் பணியாற்றும் பணியாளர்கள். இருப்பினும் சில வீரர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

**கடுமையான விதிமுறைகள்**

போட்டி நடைபெறும் இடத்தில் நுழையப் போட்டியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

போட்டியாளர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கும் தினமும் பரிசோதனை செய்யப்படுகிறது.

**ஜப்பானில் கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரிக்கிறதா?**

ஜப்பானில் மே மாதம் கொரோனா தொற்று எண்ணிக்கை உச்சத்தில் இருந்தது. பின்பு மெல்லக் குறைய தொடங்கி மீண்டும் ஜூன் மாத இறுதியில் புதிய தொற்று எண்ணிக்கை அதிகரித்தது.

ஜூலை 21ஆம் தேதி வரையில் ஜப்பானின் சுகாதாரத் துறை அமைச்சகம் 4,933 புதிய தொற்றுகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கிறது. இந்த வாரம் புதிய தொற்றின் சராசரி கடந்த வாரத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.

இருப்பினும் மே மாதம் இருந்த எண்ணிக்கையை காட்டிலும் குறைவான எண்ணிக்கையே தற்போது பதிவாகி வருகிறது.

கொரோனா தொற்று ஒலிம்பிக் போட்டிகளை எவ்வாறு மாற்றும்?

டோக்கியோவில் நடைபெறும் போட்டிகள் எந்த பாதிப்பும் இன்றி நடைபெற புதிய தொற்று எண்ணிக்கை 100க்கு குறைந்ததாக இருக்க வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

மே மாதம் மூன்றாம் வாரத்திற்கு பிறகு தொற்று எண்ணிக்கை மெல்ல குறையத் தொடங்கியது. இருப்பினும் தற்போது தொற்று எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. டோக்கியோவில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளை காணப் பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை.

டோக்கியோவில் பார்கள், உணவகங்கள் திறப்பதற்கான நேரக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. டோக்கியோ மக்கள் அத்தியாவசிய காரணங்களுக்காக மட்டுமே பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும், முகக்கவசம் அணிந்து கொண்டுதான் வெளியே வர வேண்டும் என்றும், வீட்டிலிருந்தே பணியாற்ற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**ஜப்பானில் தடுப்பூசி செலுத்தும் பணி எவ்வாறு செயல்படுகிறது?**

ஜூலை 19ஆம் தேதி வரையில், நாட்டின் 35 சதவீதம் பேர் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியை பெற்றுள்ளனர். 23 சதவீதம் பேர் இரண்டு டோஸ் தடுப்பூசியை பெற்றுள்ளனர். அமெரிக்கா, ஃபிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் 40-50 சதவீத மக்கள் இரு டோஸ் தடுப்பூசியை பெற்றுள்ளனர். ஜப்பான் தடுப்பூசி வழங்கும் பணியை பிப்ரவரி மாதம் தொடங்கியது.

சில மாதங்கள் முன்பு வரை ஃபைசர் தடுப்பு மருந்துக்கு மட்டுமே அங்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

சர்வதேச அளவில் பரிசோதனைகள் நடைபெற்றிருந்தாலும், ஜப்பான் தான் சுயமாகப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததால் தடுப்பு மருந்து செலுத்தும் பணி தொடங்க தாமதமாகியது.


தடுப்பு மருந்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை வர இவ்வாறான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக ஆசாஹி ஷிம்பன் என்ற செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இருப்பினும் பக்க விளைவுகள் குறித்த அச்சத்தால் தடுப்பு மருந்து எடுத்து கொள்ள மக்கள் தயங்கினர்.

தடுப்பு மருந்து குறித்து லண்டன் இம்பீரியல் கல்லூரி 15 நாடுகளில் நடத்திய ஆய்வில், ஜப்பானில்தான் அதிகப்படியான மக்கள் தடுப்பூசி குறித்து நம்பிக்கையற்றத் தன்மையுடன் இருப்பது தெரியவந்தது.

அதுமட்டுமல்லாமல் அங்கு தடுப்பூசி விநியோகத்திலும் சிரமம் ஏற்பட்டிருந்தது.

ஜப்பான் சட்டப்படி மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மட்டுமே தடுப்பு மருந்து பெற முடியும். பின்னர் அந்த சட்டம் தளர்த்தப்பட்டது.




# "ஜீவநதி" ஈழத்து நாவல் விமர்சனச் சிறப்பிதழ்

மிக அண்மைக் காலத்தில்- குறிப்பாக கோவிட் 19 தந்த முடக்கம் பலர் வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்தி இருந்தாலும். சர்வதேச அரசியல் அல்லது தொழில்சம்மந்தமாக நடைபெற்றுக்கொண்டிருந்த இணையவழிக் கலந்துரையாடல் என்பது தனிநபர் கைத்தொலைபேசிக்குள் நுழைந்தது ஆக்க பூர்வமான ஒரு விடயமாகும்.

கிழமைக்கு அல்லது மாதத்துக்கு ஒரு தடவையில் நடைபெறும் குடும்ப சந்திப்புகள் - இலக்கியச்சந்திப்புகள் - இலக்கிய கலந்துரையாடல்கள்- இலக்கிய கர்த்தாக்களை நினைவு கூருதல்என்று இவ்வாறான நிகழ்வுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.



தற்சமயம் இலண்டனில் வசிக்கும் எம். பௌசர் இலங்கையின் மறைந்த எழுத்தா ளர்களை நினைவு கூரும் முகமாகவும் அவர்களின் சேவைகளை பாராட்டவும் அவர்களை மற்றவர்கள் அறிந்து கொள்ளும் முகமாகவும் இந்த இணைய வழிக்கலந்துரையாடலை நடாத்தி வருகின்றார். இதுவரை 14 இலக்கிய ஆளுமைகள் பற்றிய கூட்டங்களில் ஒவ்வோர் முறையும் 4 பேராசிரியர்கள் அல்லது இலக்கிய கர்த்தார்கள் ஒவ்வொருவரும் 30 நிமிடங்கள் உரையாற்றி வருகின்றார்கள். உரையாடல்களின் பின்பு பார்வையாளர்களின் கலந்துரையாடல் இடம் பெறுகின்றது.

இந்த வரிசையில் இன்று எம்முடன் இல்லாத நினைவு கொள்ள வேண்டிய 120 எழுத்தாளர்கள் உள்ளார்கள் என அவர் குறிப்பிடுகின்றார்.

இதனை தொடர்ந்து கவனிக்கும்பொழுது எனக்குள் எழும் கேள்வி,

"இன்று அவர்களுக்கு கொடுக்கப்படும் கௌரவங்கள் அவர்கள் வாழும் காலத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டதா?" என்பதே.

அந்த கேள்வி என்னுள் எழுந்த பொழுது, பரணிதரனின் தொகுப்பு என் கைகளில் கிடைத்தது. அப்பொழுது இந்தக் கட்டுரையை எழுத வேண்டும் என்று என் மனம் பேரவாக் கொண்டது.

அதற்கு காரணம் அண்மையில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் எனவும் கொள்ளலாம்.

எனது அடுத்த சிறுகதைத் தொகுப்பினை அதில் இடம் பெற்றுள்ள 20 சிறுகதைகளுக்கு உலகளாவிய அளவில் உள்ள அறியப்பட்ட எழுத்தாளர்கள் - இலக்கியவாதிகள் - இலக்கிய ஆர்வலர்களிடம் இருந்து 20 சிறிய ஒரு பக்க அளவில் விமர்சனங்களைப் பெற்று ஒவ்வோர் கதையின் பின்பும் இணைக்கப் பிரியப்பட்டேன். இதன் மூலம் வாசகரின் சுவைப்பும் விமரிசகரின் சுவைப்பும் ஒரே கோட்டில் செல்லுகின்றதா அல்லது வேறு வேறு கோட்டில் செல்லுகின்றதா என அவரவர்களே மதிப்பீடு செய்ய முடியும் என்ற பெருவிருப்பினால்.

**வி. ஜீவகுமாரன் - டென்மார்க்**

தொடர்பு கொண்ட அனைவரும் எனக்கு ஒத்துழைத்துள்ளார்கள். ஆனால் அவை என்னை வந்தடைந்த காலங்கள் வேறு வேறாக அமைந்தன. புத்தகத்தை அவசரமாக வெளியிடத்தேவையில்லை என்பதால் நானும் எவரையும் நெருக்கவில்லை. சுமார் 3 மாதத்தின் பின்பு அனைத்தையும் பெற்று இப்பொழுது தொகுப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதனுடன் ஒப்பிடும் பொழுது பரணிதரன் அவர்களின் இந்த உழைப்பிற்குப் பின்னால் 105 நாவல்களைப் படைத்தவர்களையும்- அதனை விமர்சனம் செய்ய ஒத்துக் கொண்டவர்களையும் தொடர்பு கொண்டு- அந்த அந்த நூல்கள் அந்தந்த விமர்கர்களின் கைகளை சென்றடையவும், பின்பு அவர்களிடம் இருந்து விமர்சனங்களைப் பெறவும் என்ன பாடுபட்டிருப்பார் என யோசித்துப் பார்க்கின்றேன்.

தொலைபேசி - மின்னஞ்சல்கள் மூலம் உலகம் முழுவதும் சுற்றி சுற்றி வந்தது போகயாழ். குடாநாட்டுக்குள் புத்தகங்களைப் பெற அவர் அலைந்ததை அறிவேன்.

ஒரு கை ஓசையான உழைப்பிற்குப் பல கைகள் சேர்ந்து நிச்சயம் ஒலிக்க வேண்டும்.

அந்தக் கைளின் ஓசை அவருக்கு மேலும் மேலும் இன்னமும் பலத்தைச் சேர்க்க வேண்டும். இதில் சுமார் 500 பக்கத்தில் பெரிய அளவில் தடித்த அட்டையுடன் புத்தக வடிவமைப்பு - அச்சேற்றுதல் - விற்பனை என்ற புள்ளிகளுக்குள் நான் வரவே இல்லை. காரணம் இந்த முயற்சியை முன்னெடுக்கும் பொழுதே பரணிதரனுக்கு இந்தப் பணியின் பழு தெரிந்திருக்கும்.

# பஸிலின் பாராளுமன்ற வருகை சட்டவிரோதமானதொன்றல்ல!

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 25

பசில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை சட்ட விரோதமானதல்ல என ஐ.தே.க. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சட்ட வல்லுநர்கள் இதை தெரிவித்துள்ள நிலையில் அவரது உறுப்புரிமையை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றம் செல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

நாட்டில் தேசிய பொருளாதாரம், ஜனநாயகக் கொள்கை ஆகியவை பாதிப்புக்குள்ளாக்கியுள்ள நிலையில் நாட்டின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு குடும்ப ஆட்சி தொடர்ந்தால் நாட்டு மக்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்படும் என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



# ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை; திங்களன்று அடுத்த சுற்றுப் பேச்சு

கொழும்பு, ஜூலை 25

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, கல்வி அமைச்சருக்கும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்று பேச்சு நாளை திங்கட்கிழமை காலை கல்வி அமைச்சில் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சரவை எடுக்கும் முடிவுகள் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயல்முறைப் பரீட்சைகளில் இருந்து ஆசிரியர்கள் விலகினால், அவர்கள் சமூகத்திலிருந்து பல்வேறு களங்கங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்ட அவர், அனைத்து ஆசிரியர்களும் இந்த நேரத்தில் மாணவர்களின் கல்வி குறித்து உணர வேண்டும் என்றும் கூறினார்.

# எல்லை தாண்டிய இந்திய மீனவர்களால் பருத்தித்துறையில் வலைகள் கடும் சேதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

எல்லை மீறிய இந்திய மீனவர்களால் வடமராட்சி பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர்களின் பல இலட்சம் பெறுமதியான வலைகள் நாசம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் கடலுக்கு சென்று வலைகளை கடலில் விடப்பட்டிருந்தன இந்நிலையில் நேற்று தமது வலைகளில் மீன்களை ஏடுப்பதற்காக படகுகளில் சென்று தேடியபோது பலரது வலைகள் காணாமல் போயுள்ளதுடன் பலரது வலைகள் வெட்டப்பட்டும் துண்டாடப்பட்டும் காணப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் தலா மூன்றரை இலட்சம் பெறுமதியான வலைகள் நாசமாகியுள்ளன.

இவ்வாறான சம்பவம் பல தடவைகள் இடம் பெற்றுள்ளன.

இது தொடர்பாக கடற்றொழிலமைச்சருடன் பல தடவைகள் முறையிட்டும் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்றும் தற்போது கொரோனா காலத்தில் கடன் பட்டு வலைகளை கொள்வனவு செய்து தொழிலுக்கு சென்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் இவ்வாறு வலைகள் வெட்டப்பட்டு நாசம் செய்யப்பட்டதுடன் பலரது வலைகளும் காணாமல்போயுள்ளன என்றும் கூறப்பட்டது.

இதனால் இந்த மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு கடனாளியாகியுள்ளனர்.

அரசாங்கம், அமைச்சர், கடற்படையால் கட்டுப்படுத்த முடியாது என்றால் கூறுங்கள் மீனவர்கள், மகரகளாக நாம் எமது கடலை கட்டுப்பாடாக, பாதுகாப்போம் என்று பருத்தித்துறை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு எண்ணிக்கையில் பெரும் சரிவு

கொழும்பு, ஜூலை 25

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்வோரின் எண்ணிக்கை கடந்த காலங்களில் 200,000 வரை குறைந்துள்ளது என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 200,000 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளியேறுகிறார்கள், ஆனால் அந்த எண்ணிக்கை இப்போது 30,000 ஆக குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இது அந்நிய செலாவணி வருவாயில் கூர்மையான சரிவுக்கு வழிவகுத்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பல காரணங்கள் உள்ளன கூறிய அவர், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றவர்களின் ஓராண்டு நீடிப்பு மற்றும் கொரோனா தொற்றுநோயால் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இழப்பது உட்பட, இது பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது என்றும் கூறினார்.

இருப்பினும், ஏற்றுமதி வருவாய் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெள்ளியன்று 160,622 பேருக்கு தடுப்பூசி



கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் நேற்று முன்தினம் மாத்திரம் 160,622 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் 40,110 பேருக்கு செலுத்தப்பட்டதாகவும் இரண்டாவது டோஸ் 10,083 பேருக்கு செலுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பைசர் தடுப்பூசியின் முதல் டோஸ் 13,308 பேருக்கும் மடர்னா தடுப்பூசியின் முதல் டோஸ் 97,121 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

இதனை அடுத்து நாட்டில் இதுவரை 6,693,072 பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும் 1,746,397 பேருக்கு முழுமையாகவும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 31 - 10 - 2003 |  | 21 - 07 - 2021 |

### செல்வி ஜினிதா வசந்தன்

லண்டன் Northampton ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜினிதா வசந்தன் அவர்கள் கடந்த 21.07.2021 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் – மீனாட்சி தம்பதிகள், காலஞ்சென்ற வடிவேலு, பாலலச்சுமி தம்பதிகள், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் – தங்கம்மா தம்பதிகளின் பூட்டப் பிள்ளையும், சுப்பையா பத்மாவதி (வேலணை) தம்பதிகள், வடிவநாதன் சிறிதேவி (வேலணை) தம்பதிகளின் அன்புப் பேத்தியும், வசந்தன் சிவநிதி (உசா) அவர்களின் அன்பு மகளும், வசிகா அவர்களின் மூத்த அன்புச் சகோதரியும், பரமசிவம் லஜிதா (லண்டன்), கலைச் செல்வன் கஜேந்தினி (வேலணை), தயாபரன் மேகலா (வேலணை) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், சங்கரலிங்கம் சிவாஜினி (லண்டன்), முருகதாஸ் மாலினி (வேலணை), சேனாதிராசா சுபத்திரா (லண்டன்), காந்தரூபன் சுபதினி (வேலணை), விசாகன் (லண்டன்), வசிகரன் (பிரான்ஸ்), கனிஸ்கரன் (வேலணை) ஆகியோரின் அன்பு மருமகளும், சுலக்ஷன் (விஸ்னு), கதிர்ஷன், ஹர்ஷன், கிஷாந், அஸ்விந், துபிக்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகிருஷ்ணன், சிவகஜன், சனுஜன், முவிசன், மவிசன், மவிசா, சவிசன், கௌசி, மதுலிகா, உகாசினி, சுஜந்தன், சுஜந்தா, வவிசன் ஆகியோரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.07.2021 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் Grange Park Parish Council School Ln, Northampton NN4 5FZ, United Kingdom என்ற இடத்தில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**வசந்தன் (தந்தை)** – 00447411335212
**பரமசிவம் (சித்தப்பா)** – 00447306276161
**விசி (மாமா)** – 00447862029553
**கனிஸ்கரன் (மாமா)** – 0775396745
**சுப்பையா (தாத்தா)** – 0752651496
**வஜி (மாமா)** – 0033758441631

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 07 - 1941 |  | 24 - 07 - 2021 |

### திருமதி சுகிர்தவதி வீராசாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியை – யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. சுகிர்தவதி வீராசாமி அவர்கள் நேற்று (24.07.2021) சனிக்கிழமை அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி துரைராஜா – இரத்தினாம்பாள் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி கிருஷ்ணசாமி – வள்ளித்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கி. வீராசாமி அவர்களின் பாசமிகு மனைவியும், ஆனந்தி (Brisbane), விஜித்தன் (Melbourne) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரை ரெத்தினவதி, லலிதவதி, மானவதி, ரூபாவதி, சண்முகபாலன், சண்முகவரதன், கிருபாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரகுபதி, உஷாராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், காலஞ்சென்ற குணசிங்கம், தங்கவடிவேல், சிவலிங்கம், ஈஸ்வரி, சுசீலாதேவி, மகேந்திரன் மற்றும் நாகேஸ்வரி, கே.சாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யாதவ், வேனுஷா, வேனுஷன் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.07.2021 புதன்கிழமை Melbourne, Falkner மயானத்தில் பி.ப 01.45 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :

**ஆனந்தி ரகுபதி (மகள்)**
0061 433200971
**விஜித்தன் (மகன்)**
0061423757016

No.52, Manley Street, Epping,
Victoria - 3079, Australia.

தகவல்:
**குடும்பத்தினர்.**

நடுத்தெரு,
தொண்டைமானாறு,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தில் நேற்று 24 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 33 பேர் நேற்று கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 605 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ். மாவட்டத்தில் 24 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 03 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 02 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 03 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, பலாலி தனிமைப்படுதல் நிலையத்தில் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(இ - 03)

# ஒரு தொகை வெடிமருந்துகள் யாழ்.குருநகர் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். குருநகர் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது ஒரு தொகுதி வெடி மருந்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

குருநகர் பகுதியில் சட்டவிரோதமாக வெடிபொருட்கள் கையாளப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இராணுவத்தினர் நேற்று திடீர் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தியிருந்தனர். இதன்போது ரி.என்.ரி. வெடிமருந்து மற்றும் 4 டெடனேட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை இராணுவத்தினரும் பொலிஸாரும் முன்னெடுத்துள்ளனர்.

(இ - 03)

## ஜனாதிபதியின்...

ஆராய்வதற்காக முன்னைய வடமாகாண சபை உறுப்பினர்களின் எதிர்ப்புக் கூட்டம் யாழ்ப்பாணம் இளம் கலைஞர் மன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றபோது உரையாற்றியபோதே விக்னேஸ்வரன் இதனை தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“ஆளுமையுள்ள பல தமிழ் அலுவலர்கள் இருக்கும் போது இவ்வாறான ஒரு தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்றால் அவரின் பௌத்த சிங்கள சிந்தனையின் வெளிப்பாடே இது என்று தான் நாங்கள் இந்த நியமனத்தைக் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு தகுதிவாய்ந்த ஆளுமை மிக்க தமிழ் அலுவலர் ஒருவரை ஜனாதிபதி நியமித்திருக்கலாம். ஆளுமை மிக்கவர்கள் தமிழரிடையே இருக்கும் போது தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிரான ஒரு நியமனத்தைச் செய்திருக்கின்றார்கள் அரசாங்கத்தினர்.

தமிழ் மண்ணில் பிரதம செயலாளராகத் தமிழ் தெரிந்த ஒருவரே நியமிக்கப்பட வேண்டும். இம் மாகாணத்தின் பெரும்பான்மை மக்களின் மொழியறியாத ஒருவரை நியமித்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களை அவமதித்துள்ளார், வஞ்சித்துள்ளார் ஜனாதிபதி. தனது அரசியலுக்கு முதல் இடமும் மக்களின் பிரச்னைகளுக்குக் கடை இடமும் அளித்துள்ளார்.

மக்களின் மொழியறியாத ஒருவர் நிர்வாகத் தலைவராக இருந்தால் அவர் மற்றவர்களின் மொழிபெயர்ப்பின் அடிப்படையிலேயே கடமையாற்ற வேண்டியிருக்கும். அவருக்கு வரும் தமிழ்க் கடிதங்கள் மொழிபெயர்த்த பின்னரே அவரால் வாசிக்கப்படுவன. ஆனால் அவை சம்பந்தமான பதில்களை அவர் தமிழ் மொழியில் தனது கையெழுத்துடன் அனுப்ப முடியாது. அவர் சிங்கள அல்லது ஆங்கில ஆவணங்களுக்கே கையெழுத்திடுவார். அக் கடிதங்களுடன் தமிழ் மொழி பெயர்ப்புக்களை அனுப்பாமல் விட இடமிருக்கின்றது.

நான் முதன் முதலில் 1979ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுச் சென்ற போது தமிழ் அலுவலர்கள் பலர் சிங்களத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்குக் கடிதம் அனுப்புவதை அவதானித்தேன். அவ்வாறு செய்யாமல் தமிழில் அனுப்புங்கள் என்று ஆணையிட்டேன். ஆணைக்குழுவிடம் இருந்து பதில் ஏதும் வரவில்லை. என்னுடைய நண்பராக இருந்த என் கல்லூரியின் பழைய மாணவரான ஆணைக்குழுச் செயலாளரைச் சென்று சந்தித்தேன். அதற்கு அவர் தந்த பதில் என்ன தெரியுமா? எங்களிடம் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை. நாங்கள் மொழிபெயர்ப்புக்கு உங்கள் கடிதங்களை வெளியாட்களுக்கு அனுப்ப முடியாது. ஆகவே தான் உங்கள் தமிழ்க் கடிதங்கள் இங்கு மண்டிக் கிடக்கின்றன என்றார்.

16ஆவது திருத்தச் சட்டம் அப்போது வெளிவந்திருக்கவில்லை. அது 1988இல் தான் வெளிவந்தது. எனினும் சட்டம் என்னவாக இருந்தாலும் தமது அடாத செயல்களை அரச அலுவலர்கள் இவ்வாறு தான் காரியமாற்றி வந்துள்ளார்கள். அதன் பின் எமது தமிழ்க் கடிதங்களுடன் ஆங்கில மொழிபெயர்ப்பை அனுப்பியதன் பின்னர் தான் பதில்கள் கிடைத்தன” என விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## ஜோசப்...

சட்டவிதிமுறைகளை மீறும் வகையிலும், மக்கள் வாழ்க்கை மற்றும் சுகாதார விடயங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் டில்ஷான் கமகே மற்றும் அமைப்பின் சட்டத்தரணி மதுரங்க விஜயரத்ன ஆகியோர் இணைந்தே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

இதன்பின்னர் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

“கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக நாட்டின் குடிமகன் என்ற முறையிலும் எனது வாழ்க்கையும் நாட்டு மக்களின் அமைதியான வாழ்க்கை முறையும் அபாயத்துக்கு உட்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அதிபர் சேவை சங்கம் உள்ளிட்ட அதிபர், ஆசிரியர் சங்கங்கள் பல ஒன்றிணைந்து தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் வகையிலும், சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறும் வகையிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாகச் சென்றது.

விசேட கொரோனா பரவலால் உலக நாடுகள் பாரிய சுகாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. இவ்வாறான நிலையில் நமது நாட்டின் சுகாதாரப் பிரிவினர் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை மதிக்காது சுகாதாரப் பிரிவினரின் முயற்சிகளைக் கேள்விக்குறியாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக, மீண்டும் கொரோனா பரவலை எதிர்கொள்ளும் அபாய நிலைக்கு நாடு முகங்கொடுத்துள்ளது.

விசேடமாக இந்தியாவில் பலரின் உயிரைப் பறித்த கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நமது நாட்டிலும் இனங்காணப்பட்டுள்ள இந்தத் தருணத்தில் சகல சுகாதார விதிமுறைகளையும் கேள்விக்குறியாக்கும் வகையிலும் இலங்கை குற்றவியல் சட்டத்தை மீறும் வகையிலும் குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஆகியோரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக அன்று அன்றாடப் பணிகளுக்காகக் கொழும்புக்கு வந்தவர்களும், பணியிடங்களுக்குச் சென்றவர்களும் பொது மற்றும் தனியார் வாகனங்களில் கொழும்புக்கு வந்த மக்களும் கடுமையான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்” - என்றார். (இ)

## மீண்டும்...

வித்ததாவது:-

“திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளை கலாசார ரீதியில் நடத்துவதற்கு அனுமதி வழங்கும் வகையிலேயே, கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. எனினும், அந்தத் தளர்வுகளையும் மீறி நிகழ்வுகள் நடத்தப்படுமாயின், எதிர்வரும் நாட்களில் மீண்டும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும்.

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையிலும் மரணங்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்படுமாயின், கடந்த மே மாதம் போன்று இறுக்கமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்த நேரிடும்.

டெல்டா பிறழ்வானது வடக்கு, கிழக்கு, மேல், தென் மாகாணங்களில் அடையாளங்காணப்பட்டுள்ளதன் அடிப்படையில், டெல்டா பிறழ்வு நாடு முழுவதும் பரவியுள்ளமை புலப்படுகின்றது” - என்றார். (இ)

## மேலும் 1,707...

டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 94 ஆயிரத்து 820 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 957 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 665 ஆக அதிகரித்துள்ளது.

## கறுப்பு ஜூலையை...

செலுத்தினார்கள்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்த நிகழ்வில் அருட்தந்தை சக்திவேல் உட்பட பல சமூகச் செயற்பாட்டாளர்கள் இதில் கலந்துகொண்டிருந்தார்கள்.

## சிகிச்சையின்...

சிகிச்சைகளின் பின்னர் நேற்று மீண்டும் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணம் செலுத்தும் வார்டில் தம்மை சிகிச்சைக்காக அனுமதிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கோரியிருந்தார்.

எனினும், அவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதால், குற்றப் புலனாய்வு திணைக்களம் அதை மறுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வடக்கு மாகாண...

வடக்கு மாகாணத்துக்குப் புதிய பிரமத செயலாளராக சமன் பந்துலசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று சந்தித்தார்கள்.

இதன்போதே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பும் தீர்மானம் எடுக்கப்பட்டது. நேற்றைய கூட்டத்தில் 13 பேர் நேரில் சமூகமளித்து ஜனாதிபதிக்கு அனுப்பும் கடிதத்தில் ஒப்பமிட்டனர். 14 பேர் தொலைபேசி மூலமாக இந்தக் கடிதத்துக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

நிர்வாக மொழியான தமிழ் மொழியைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் மக்களினதும் அதிகாரிகளினதும் தொடர்பாடல் கருதி இப் பதவிக்குப் பொருத்தமான தமிழ் அதிகாரிகளில் ஒருவரை நியமித்து உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொரோனா...

பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 54 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 52 பேரில் 26 பெண்களும்,, 26 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எரிபொருள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”எரிபொருள் விலையைக் குறைப்பதற்கான மாற்று வழி என்னவென்பது குறித்தோ அதற்கான வேலைத்திட்டம் குறித்தோ எனக்குத் தெரியவில்லை.

எரிபொருள் விலை குறைப்பு தொடர்பாக அரசில் எவ்வித பேச்சுகளும் நடைபெறவில்லை.

“எரிபொருள் விலை ஏன் குறைக்கப்படவில்லை?“ என்பதை “எரிபொருள் விலையைக் குறைப்போம்“ என்று வாக்குறுதி அளித்தவர்களிடமே கேட்க வேண்டும்.

எரிபொருள் விலை குறைப்புக்கான மாற்று வழிகளை முன்மொழிய எரிபொருள் விலையை அதிகரித்ததாகக் கூறி, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்த எதிர்க்கட்சியும் தவறியுள்ளது” - என்றார். (இ)

## வீட்டு வேலைக்கு...

அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டமொன்று இல்லாதமையினாலேயே தற்போது அதிகளவிலான சிறுவர்கள் தொழிலில் அமர்த்தப்படுவதாக அவர் கூறினார். ஆகவே, இந்த விடயத்தை கருத்திற்கொண்டு அமைச்சு என்ற ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதற்கமைய, யாரேனும் ஒருவர் வீட்டு பணிக்காக அமர்த்தப்படுவார்களாயின், அவர்கள் கிராம உத்தியோகத்தர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான உத்தியோகத்தர் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலகத்தில் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு பதிவுகளை மேற்கொண்டால், சிறுவர்களை வேலைக்கமர்த்தும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமென மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த சுட்டிக்காட்டினார்.

ஈழநாடு
Eelanadu

# ரஞ்சன் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட வேண்டும்!

## திலீப் வெத ஆராய்ச்சி எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு, ஜூலை 25**

**"கொலைக் குற்றவாளியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதைப் போன்று கொலை எதுவும் செய்யாமல் சிறிய குற்றத்துக்காகச் சிறையில் வாடும் முன்னாள் பாராளுமன்ற ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராய்ச்சி தெரிவித்தார்.**

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிகிச்சையொன்றுக்காக தங்கல்ல ஆதார வைத்தியசாலைக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அவரைப் பார்வையிடுவதற்கு வைத்தியசாலைக்கு வந்தபோதே திலீப் வெத ஆராய்ச்சி எம்.பி மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் எம்.பி. ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, வைத்தியசாலையில் சுமார் ஒரு மணித்தியாலம் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சையின் பின்னர் அவர் சிறைச்சாலைக்கு மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த திலீப் வெத ஆராய்ச்சி எம்.பி.,

"மரணதண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதைப் போன்று ரஞ்சன் ராமநாயக்கவும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர எம்.பிக்கு சிறைச்சாலைக்குள் விசேட சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், நோய்வாய்ப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உறங்குவதற்கு பாய் படுக்கையே வழங்கப்படுகின்றது" - என்றார். (இ)

## கொரோனா நோயாளர்களை
# வீட்டில் தனிமைப்படுத்தினால் சமூகத் தொற்று அதிகரிக்கும்




கொழும்பு, ஜூலை 25

"இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தினால் வீடுகளிலுள்ள வர்களுக்கும் தொற்றுப் பரவும் அபாயம் அதிகரிக்கும். இதனூடாக சமூகத் தொற்றும் அதிகரிக்கும். எனவே, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுபவர்களை வீடுகளில் தனிமைப்படுத்துவது இலங்கை போன்ற நாடுகளுக்கு உசிதமான தீர்மானம் அல்ல."

- இவ்வாறு விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேனா தெரிவித்தார்.

தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலையை நாம் தற்போது எதிர்கொண்டுள்ளோம். நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களை எடுத்துக்கொண்டால் தினமும் இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்பட்டது.

அதேபோன்று நாட்டில் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் 68 பேர் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர்.

டெல்டா வைரஸ் தொற்று என்பது வீரியமிக்கது என்பதுடன் விரைவில் பரவதுறைக்குப் பாரியப் பாதிப்பை ஏற்படுத்தும்.

டெல்டா வைரஸ் பரவல் அதிகரிக்குமாயின் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை, அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இடநெருக்கடி, ஒட்சிசன் பற்றாக்குறை என்பன ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, டெல்டா வைரஸ் பரவலானது பாரிய பிரச்னையைத் தோற்றுவிக்கும்.

கடந்த இரு தினங்கள் சுமார் 1,700 இற்கும் மேற்பட்டோர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். பி.சி.ஆர். அன்டிஜன் பரிசோதனைகளை எடுத்துக்கொண்டால் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவிலேயே இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகள் அதிகரிக்கப்படுமாயின் தொற்றாளர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். எதற்காக தினமும் தொற்றாளர்கள் அதிகரிக்கின்றனர்? நான்காவது அலைக்குச் செல்ல நாம் முயற்சிக்கின்றோமா? அதுவே இன்று பிரச்சினை.

கொரோனாத் தொற்று உறுதிபடுத்தியவர்களை வைத்தியசாலைக்கு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லாது வீடுகளில் தனிமைப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர். தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்துவது இலங்கைக்குப் பொருந்துமா?

இலங்கையை எடுத்துக்கொண்டால் அநேகமானவர்கள் விசாலமான வீடுகளில் வாழவில்லை. சிறிய அறைகளிலேயே வசித்து வருகின்றனர். தொற்றாளர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்துவதற்கு பிரத்தியேக அறை ஒன்று இருக்க வேண்டும். பிரத்தியேக மலசலகூடம் இருக்க வேண்டும். இவ்வாறான வசதிகள் பெரும்பாலான மக்களுக்கு இல்லை. எனவே, தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தவது என்பது உசிதமான தீர்மானம் இல்லை.

தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தினால் வீடுகளிலுள்ளவர்களுக்கும் தொற்றுப் பரவும் அபாயம் அதிகரிக்கும். இதனூடாக சமூகத் தொற்றும் அதிகரிக்கும். இவ்வாறானத் தீர்மானங்களை யார் எடுக்கின்றார்கள் என்று தெரியவில்லை" - என்றார். (இ)

# கொரோனா வைரஸால் 500 சிறுவர்கள் பாதிப்பு

## 10 பேர் உயிரிழப்பு



கொழும்பு, ஜூலை 25

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 500 சிறுவர்கள் (வயது 5 - 10) கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்திய சாலையில் இதுவரை சிகிச்சை பெற்று சென்றுள்ளனர் என்று குறித்த வைத்தியசாலையின் குழந்தைநல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றால் 10 சிறுவர்கள் இதுவரை குறித்த வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிறுவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகுவது அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகும் 5 - 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நாள்தோறும் சேர்க்கப்படுகின்றனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் 28 சிறுவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு கொரோனா, டெங்கு ஆகிய இரு நோய்களுக்குமான அறிகுறிகள் காணப்படுகின்றன.

கொரோனா சிகிச்சைக்கான இரு விடுதிகளிலும் சிறுவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு விடுதிப் பிரிவில் 18 சிறுவர்களும் மற்றைய பிரிவில் 10 சிறுவர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று திரிபான டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் நாட்டில் அதிகம் இனங்காணப்பட்டு வருவதால் சிறுவர்களின் உடல் நலம் தொடர்பில் அவதானமாக இருக்கவும். அநாவசியப் பயணங்களுக்குச் சிறுவர்களை அழைத்துச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

அவசியத் தேவைகளுக்காக சிறுவர்களை வெளியில் அழைத்துச் செல்லும் போது சிறுவர்களுக்கு முகக்கவசங்கள் அணிவித்து அழைத்துச் செல்வதைத் தவறாது கடைபிடிக்கவும். சமூக இடைவெளியைப் பேணி நடக்கவும்" - என்றார். (இ)

# வருடத்தில் 800 பேர் நீரில் மூழ்கி மரணம்



கொழும்பு, ஜூலை 25

நீரில் மூழ்கி வருடமொன்றுக்கு சுமார் 800 பேர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் தேசிய விபத்துக்களைத் தடுக்கும், கட்டுப்படுத்தும் பிரிவின் வைத்தியர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

21 - 60 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகம் இவ்வாறு உயிரிழக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்களைத் தடுக்கும் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், உலகளவில் வருடமொன்றுக்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் நீரிழ் மூழ்கி உயிரிழக்கின்றனர் என்றும், இவற்றில் மூன்றில் ஒருவீதமான மரணங்கள் தெற்கு ஆசியா நாடுகளிலேயே பதிவாகின்றனர் என்றும் அவர் கூறினார்.

நீரில் மூழ்குபவர்களைக் காப்பாற்ற நேர்ந்தாலும் நீண்டகால உடல் பாதிப்புகள் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, நீரிழ் மூழ்குவதைத் தடுப்பதற்காகப் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். அத்துடன் பாதுகாப்பற்ற நீர்நிலைகள் தொடர்பில் கவனம் செலுத்தல், நீரில் மூழ்குபவர்கள் அவர்களாகவே மீண்டு வருவதற்கு பயிற்சிகளை அளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்
*6.35 மணி* : மதம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை (நேரலை)
*10.30 மணி* : அறிந்தும் அறியாமலும்
*11.00 மணி* : BEAT BOX
*11.30 மணி* : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
*1.00 மணி* : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி




*1.30 மணி* : வீக் என்ட் மூவி-உன்னை நினைத்து
*4.30 மணி* : காட்டூன் தமிழ்
*5.00 மணி* : COFFE WITH பிரமுகர் -
இசையமைப்பாளர் ஸ்ருதி பிரபா



*6.00 மணி* : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்




**இரவு**
*7.00 மணி* : SPOTLIGHT தமிழ்த் தேசிய கட்சியின்
தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா



*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*09.00 மணி* : செல்லாடுகளம்
*10.00 மணி*: -நேர்கொண்ட பார்வை

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஒய்வெடு நிலவே

**இரவு**
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை

**காலை**
*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*8.00 மணி* : ஜெபமாலை
*9.00 மணி* : திருப்பலிப்பாடல்கள்
*09.30 மணி* : மன்றாடு
*10.00 மணி*: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : ஜெபமாலை

**பகல்**
*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*02.00 மணி* : நற்சிந்தனை
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு